Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 11 ஏவிளம்பி ஹூ ஐப்பசி மாதம் 4 திகதி 20-10-57 ஞாயிற்றுக்கிழமை ரபிஹுவ்வல் பிறை 25 இதழ் 21




மெய்யென்பேர்க் ஆட்டுப்பால் மா

இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு:

த. கணேசன்,
53, மெயின் வீதி.
கொழும்பு

# குடியேற்றத் திட்டங்களில் சென்று குடியேற தமிழ் குடும்பங்கள் தயக்கம்

## பயத்தைப் போக்குவதற்காக சுற்றுப் பிரயாணங்களுக்கு ஏற்பாடு

## குடியேற்றத்தை ஊக்குவிக்க தமிழரசுக் கட்சியின் திட்டங்கள்

(சுதந்திரன் நிருபர்)

"அரசாங்கக் குடியேற்றத் திட்டங்களிலும், வேறு பிற இடங்களிலும் சென்று குடியேறி, காடு திருத்திக் களனியாக்கும் முயற்சியில் ஈடுபடத் தமிழ்க் குடும்பங்கள் பெரிதும் தயக்கங்கொண்டனவாகக் காணப்படுகின்றன" இவ்வாறு பிரபல தமிழ்த் தலைவர்களிலொருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

"சிங்களக் குடும்பங்களின் முன்னேடித்தனமும், முயற்சியும் இந்த நாட்களில் தமிழ் குடும்பங்களுக்கு இல்லாதிருப்பது பெரிதும் வருந்தத்தக்கது" என்று மேலும் கூறிய அவர் "இந்த மனோபாவத்தை மாற்றியமைக்காவிட்டால் எத்தகைய பிரதேசசபை ஆட்சி வந்தபோதிலும் தமிழ்ப் பிரதேசத்தைச் சிங்களக் குடியேற்றத்திலிருந்து காப்பாற்ற முடியாது" என்றும் தெரிவித்தார்.

திருகோணமலைக் கடற்றளத்திலிருந்து எத்தனையோ குடும்பங்கள் அணிமையில் வேலையிழந்தபோதிலும் அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பதவியாக்குளக் குடியேற்றத் திட்டம் போன்ற குடியேற்றத் திட்டங்களிலோ அன்றி அரசினர் நிலம் கொடுக்கும் வேறு இடங்களிலோ சென்று குடியேறி விவசாயத்தில் ஈடுபட நாட்டங்கொண்டவர்களாகத் தெரியவில்லையென்று சொல்லப்படுகிறது. அதிகமானோர் திரும்பவும் வேறெங்காவது கிழமைச் சம்பள, மாதச் சம்பள அடிமை வேலைகள் கிடைக்காவா என்றுதான் அலைந்து திரிகின்றனராம். சோம்பலால் பீடிக்கப்பட்ட இவர்கள் உடல் உழைப்பால் சம்பாதிக்க தயக்கமுற்றவர்களாக பின்வாங்குகிறார்கள் என்று தெரிய வருகிறது.

### வெளியிடங்களுக்கு செல்ல பயம்

வேறொருசாரார் உழைப்பதற்கு தயாராகவிருந்தும், வெளியிடங்களுக்குச் செல்ல பயந்தவர்களாக இருக்கிறார்களாம்! இப்படியானவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இருப்பதாகவும், யானைஇறவுக்கு அப்பால் செல்ல இவர்கள் அஞ்சுவதாகவும் நம்பப்படுகிறது.

### சுற்றுப்பிரயாணம்

எனவே இப்படியானவர்களைத் திரட்டி, பல்வேறு குடியேற்றப் பிரதேசங்களுக்கும் ஒருமுறை சுற்றுப் பிரயாணமாக அழைத்துச் சென்று அவர்களுக்கு இடத்தின் தன்மையையும், நிலத்தின் வளத்தையும் நேரில் காட்டிப் பயத்தைப் போக்கினால் அவர்கள் துணிவோடு குடியேற்றத் திட்டங்களில் சென்று குடியேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### தமிழரசுக் கட்சியினர் திட்டம்

இந்த வகையில் தமிழ்க் குடும்பங்களின் குடியேற்றத்தை ஊக்குவிப்பதற்காக இவ்வாரம் கொழும்பில் ஒரு மகாநாட்டைத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலர் ஏற்பாடு செய்து சில திட்டங்களை வகுத்துள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் காலியாகவுள்ள இடங்களில் எல்லாம் தமிழ் பேசும் குடிமக்கள் சென்று குடியேறி நிலங்களை சுவீகரித்துக் கொள்ளாவிட்டால் காலவரையில் தமிழ்ப் பிரதேசங்களை நாம் கட்டிக்காக்க முடியாமல் இழக்க நேரிடும் என்ற கருத்து பிரஸ்தாப மகாநாட்டில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

### தேனீர்ப் பிரதிநிதி

பாராளு மன்றத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதியொருவர் பகல் முழுவதும் வேறு வேலைகள் பார்த்துவிட்டு சரியாக 'டாண்' என்று நான்கு மணியடிக்கும் சமயம் பார்த்து பாராளுமன்றச் சிற்றுண்டிச் சாலைக்குள் புகுந்து தேனீர் அருந்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளாராம்.

இந்தப் பிரதிநிதியை இளம் பிரதிநிதிகள் சிலர் 'தேனீர்ப் பிரதிநிதி' என்று அழைத்து வருவதாகத் தெரிகிறது.



கல்பிட்டியில் நடந்த முகமது நபி பிறந்த தின விழாவின் போது பிடிக்கப்பட்ட படம். மேடையில், வலது கோடியில் கூட்டத்துக்கு தலைமைவகித்த அன்பர் பூபதிதாஸர் காணப்படுகிறார். (கூட்டச் செய்தியை 9-ம் பக்கத்தில் காண்க.)

# தபால்பைகளுடன் யூனிபோம் அணியாத ஆசாமிகள்

## எந்த இடத்திலும் வைத்துப் பைகளைப் பிரிக்கும் மர்மம்

## இவர்கள் தபாலாபீஸ் சிப்பந்திகளா? பொது மக்கள் சந்தேகம்

"தபால் பட்டுவாடா செய்யும் தபாலாபீஸ் சிப்பந்திகள் பலர் தபால் கொண்டு செல்லும் பைகளை எந்த இடத்திலும் வைத்துப் பிரிப்பதும் அவற்றுள் இருக்கும் தபால்களைத் தெரிந்தெடுத்து ஆராய்வதுமான ஒழுங்கற்ற செய்கையில் ஈடுபட்டுள்ளார்கள். இப்படிச் செய்பவர்களில் சிலர் யூனிபோம் அணிந்து கொள்வதாகவும் தெரியவில்லை. இதனால் இவர்கள் உண்மையில் தபால் ஆபீஸ் சிப்பந்திகள் தானா அல்லது தபால் பைகளை திருடிய ஆசாமிகளா என்று ஐயுற வேண்டிய நிலை சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகிறது." இவ்வாறு கொழும்பு நேயர்கள் பலர் சுதந்திரனுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

அனுப்பப்படும் பெரும்பாலான தபால்கள், பார்சல்கள் குறிப்பிட்ட நபர்களைப் போய்ச் சேர்வதில்லை என்ற குற்றச்சாட்டும், கடிதங்களில் வைத்து அனுப்பப்படும் மணி ஆடர்கள், போஸ்டல் ஆடர்கள், ரூபாய் நோட்டுக்கள், காசோலைகள் முதலியவை மிகச் சாதுரியமாகத் திருடப்பட்டு விடுகின்றன என்ற புகாரும் அதிகரித்து வரும் இந் நாட்களில் தபால் ஆபீஸ் (பட்டுவாடா) சிப்பந்திகள் யூனிபோம் அணியாது தபால் பட்டுவாடாவுக்கு செல்வதும், எதேச்சையாக எந்த இடத்திலும் வைத்து தபால் பைகளைப் பிரிப்பதும் பொது மக்களுக்கு இயற்கையாகவே அவர்கள் மீது சந்தேகத்தை உண்டுபண்ணலாம்.

### நம்பிக்கை யளிக்க முடியாத செய்கை

இதுவரை எத்தனையோ தபால் ஆபீஸ் சிப்பந்திகள் நேர்மையும் நாணயமுமற்ற நம்பிக்கைத் துரோகமான தபால் திருட்டுத் தொழிலில் இறங்கிக் கையுங்களவு (9-ம் பக்கம் பார்க்க)

எங்கள் வாடிக்கையாளர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும்
மற்றும் ஏனையோருக்கும்

தீபாவளி வாழ்த்து

அளிக்கிறோம்.

★

★ மோட்டார் வாகனங்கள் வேண்டுமா?
★ இரும்புக் கட்டிடச் சாமான்கள் வேண்டுமா?
★ மின்சார மோட்டார் உப உறுப்புக்கள் வேண்டுமா?

வேறென்ன வேண்டும்?

நோத் சிலோன் டிறேடிங் கம்பெனி லிமிட்டெட்,
11/3, ஸ்டான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

போன்: 587. தந்தி: "யாழ்றேட்ஸ்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடை மழையா? கொடூர வெய்யிலா?
எதற்கும் பாதுகாப்பளிப்பது
**மான் மார்க் குடைகளே!**



★ இலங்கையின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறு கைதேர்ந்த நிபுணர்களால் நிர்மாணிக்கப்பட்டவை மான் மார்க் குடைகளே!

★ அகோர வெப்பத்திலும் அடை மழையிலும் சம்பூரண பாதுகாப்பளிப்பதும் — நீடியகாலம் உழைப்பதற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமானதும் மான் மார்க் குடைகளே!

★ ஆடவர் குடைகள் 25'' அங்குலத்திலும், பெண்டிர் குடைகள் 20'' அங்குலத்திலும் மனத் திருப்தி அளிக்கும் விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**மெக்கி ஸ்டோர்ஸ்,**

265, மெயின் வீதி, கொழும்பு.
61, கொழும்பு வீதி, கண்டி.
154, மெயின் வீதி, காலி,
144, மெயின் வீதி, ரத்தினபுரி,
24, பஜார் வீதி, பதுளை,
11, பஜார் வீதி, குருணாக்கலை.

இலக்கியம்:

# தமிழ் நாட்டில் மூவேந்தர் ஆட்சி முகிழ்த்தது எப்போது?

## கிறிஸ்துவுக்கு முன்பா பின்பா?

## பழந் தமிழ்ப் பாடல்களில் வரும் 'மூ'- 'மூவர்' என்ற பதப் பிரயோகங்கள்

மரியதாசன்

இன்றைய நாகரிக உலகில் ஒரு புதுப் பழக்கம் வழக்கத்திற்கு வந்திருக்கிறது. எந்த அழகியின் பெயரை எவ்விடத்தில் யார் சொன்னாலும், அடுத்தாற்போல், அவளது தோளகலம், இடையகலம், தொடையகலம் மூன்றையும் கூறியே மீதிப் பேச்சிற் செல்வர். அவளுடைய பெயருடன் அவ் அகல அளவைகளும் ஒட்டியேதான் வந்து விடுகின்றன. அவைதான் அவளை அழகாற் சுமத்துகின்றன என்ற கருத்தினாற் போலும்!

இதே போல், பண்டை நாட் தமிழகத்தை நினைத்தாலும் அதனுடன் அதனை ஆண்ட சேரன், சோழன், பாண்டியன் மூவரது நினைப்பும் கூடித்தான் வரும். நாம் இன்று பெருமையாகக் கூறும் அன்றையத் தமிழகத்தைப் புகழுடன் கமழ வைத்தவர்கள் அவர்கள் தான் என்ற எண்ணத்தினாற் போலும்!

இதழை மறந்து பூவை நினைக்க முடியாது. உயிரை மறந்து வாழ்வை நினைக்க முடியாது. அங்ஙனமே மூவேந்தரை மறந்து, பண்டைத் தமிழகத்தை நாம் நினைக்க முடியாது.

### புதிய கருத்து

ஆனால் சமீப காலத்தில் தமிழகத்தில் ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் சிலர், மூவேந்தர் தமிழ் நாட்டை முறை செய்யத் தொடங்கிய காலம் மிகப் பிற்காலத்தது எனக் கூறுவாராயினர். கிறிஸ்து பிறந்ததன் பின்னரே தான் மூவேந்தர் ஆட்சி தமிழ் நாட்டில் வந்ததாயும், அதன் முன் தமிழகத்தை ஆண்டோர் பல அரசர்கள் என்பதே கிடைத்த சான்றுகளில் காணக்கிடந்ததாயும் எழுதுவாராயினர்.

### வட நூற்சான்று

இராமன் கதை தமிழ் நாட்டில் ஒவ்வொருவரும் அறிந்த தொன்று. அங்ஙனம் அறியவைத்த பெருமை அழியாய் புகழ் கொண்ட கம்பனைச் சாரும். காடேகிய மன்னன் இராமன், கட்டிய மனைவியாம் சீதையை, மையலால் நையலுற்ற முடி வேந்தன் இராவணன், சீரில்லா முறையிலே சிறை கொண்ட செய்தியும், வானரர் துணைக் கொண்டு—தன் தோள் வலிமை மிகக் கொண்டு இராமன், வாட்டமுற்ற சீதையை மீட்டு வந்த செய்தியும் கம்பன் பாடிய காதையிலே நாம் கண்டு மகிழ்ந்தவை.

ஆனால் கம்பனது வழி நூலுக்கு முதல் நூலாய் நின்றது வட மொழியில் எழுதப்பெற்ற வால்மீகி இராமாயணமாகும். காலத்தால் மிக முந்திய இவ்வட நூலின் கதையிலே மூவேந்தர் செய்திகள் மிகுந்து வரக் காணலாம். கடல் கொண்டழித்த கபாட புரத்தின் கதையும், முறை செய்த தமிழ் நாட்டின் மூவேந்தர் செய்தியும் இவ் வட நூலிலே இடம் பெற்றது வியப்பாகின்றது. ஆயினும் அதன் பின்னால் உண்மை ஒன்று தெளிவடைகிறது: அப் பண்டை நாளிலே—வால்மீகி இராமாயணம் பிறந்த காலத்திலே—கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலே தமிழகத்தை ஆண்டவர் மூவேந்தர் என்பது உண்மையாகின்றது.

### இலக்கண வழிச் சான்று

பழையன கழிதல், புதியன புகுதல், எல்லாம் உலக வழக்கந்தான். ஒரு காலத்தில் சிறப்பாயிருந்த பொருட்கள் மறு காலத்தில் காணவே கிடையாது போவதும், ஒரு நாள் வழக்கிலிருந்த பழக்கங்கள் மறுநாள் வழக் கொழிந்து போவதும் மண்ணில் நாம் கண்டதொன்று.

முன்னே மலர் வேய்ந்த கூந்தலாய் நிலம் தோய நின்ற பெண்கள் முடிகளெல்லாம் இன்று மொட்டையாய்ப் பரட்டையாய் மாறி விடுவது நாளாந்தம் நாம் கண்டு சகிக்கும் ஒன்றல்லவா?

இதைப் போலவே, மொழியிலும் காலப் போக்கால் மாற்றங்கள் ஏற்படுகின்றன—புதுச் சொற்கள் பிறக்கின்றன. பழைய சொற்கள் மறைகின்றன-பழைய சொற்களே சில இடங்களில் மாறுபாடடைந்து புதிய சொற்களாகி விடுகின்றன.

உதாரணமாய், 'உந்து' என்று ஒரு இடைச்சொல் சங்க காலத்திலேயே வழக்கிலிருந்து நழுவிப் பாவிப்பாரற்று மறைந்தது. இச்சொல் உபயோகமாயிருக்கும் பாடல்களின் எண்ணிக்கை மிக மிகச் சொற்பம்-அப் பாடல்களே தமிழ் மொழியிலுள்ள மிகப் பழைய பாடல்கள். புறநானூற்றின் நூற்றி முப்பத்தேழாவது பாடல் இவற்றுள் ஒன்று. அதனது ஆறுவது அடியிலே 'பூக்குந்து' என்ற சொல் உபயோகமாகியிருக்கிறது. அப் பாடலாவது,

"இரங்கு முரசின் இனஞ்சால் யானை
மூந்நீர் ஏணி விறல் கெழு மூவரை
இன்னுமோர் யான் அவா வறியேனே."

எனச் செல்கிறது.

இங்கே, இந்த இரண்டாம் அடியிலே காணப்படுகிற 'மூவர்'—அந்த மூவேந்தர்—அந்தப் பண்டைக் காலத்திலுமா இருந்தார்கள்? இருந்தார்கள் என்றுதானே ஏற்க வேண்டியிருக்கிறது.

### இலக்கிய வழிச் சான்று

கறுப்பு நிறப் பூனைதான் குறுக்கால் ஓடினதோ, அன்றேல் கன்னிப் பெண் தான் வெறுங் குடங் காவிச் சென்றாளோ, என்னவோ, நந்த மன்னர் இந்தியாவிற் துவங்கிய ஆட்சி சரிவரவில்லை—பத்துத் தடவை பல்லி சொல்லியும் கேளாது முடி சூடினதாயிருக்க வேண்டும், அவர்களது ஆட்சி ஓர் அரை நூற்றாண்டிற்குத் தன்னும் நிற்க முடியாது நிலை தளர்ந்தது. கி. மு. நாலாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே கடைவிரித்த நந்த மன்னர், அதே நூற்றாண்டு விடைபெறும் முன்னர் தம் மூட்டை முடிச்சுகளைக் கட்டிப் புறப்பட்டுவிட்டனர்.

அங்ஙனம் புறப்படு முன்னர், அவர்கள் அடைந்திருந்த சிறப்பை,

"பல்புகழ் நிறைந்த வெல் போர் நந்தர்
சீர் மிகு பாடலி குழீ இக்
கங்கை நீர் முதற் கரந்த நிதியங்
கொல்லோ?"

என்று புகழ்ந்து பாடினார் மாமூலனார்.

நந்த மன்னரைப் பாராட்டிப் பாடிய மாமூலனார் காலத்தவர்-கி. மு. நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இவர்,

"தமிழ் கெழு மூவர் காக்கும்
மொழி பெயர் தேஎத்த
பன்மலை"

எனத் தாம் பாடிய அகநாநூறு முப்பத்தோராவது பாடலால் தாம் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தைப் புரந்தோர் மூவேந்தர் தாமென்று தெளிய வைக்கின்றார்.

(6-ம் பக்கம் பார்க்க)

சைக்கிள்களில் சவாரி செய்ய விரும்பினால்
பிலிப்ஸ் சைக்கிளையே
தேர்ந்தெடுங்கள்.

PHILLIPS
**பிலிப்ஸ்**



சைக்கிளை அசல்பதப்படுத்தப்பட்ட உருக்கு பைசிக்கிள் உலகமடங்கிலும் புகழடையச் செய்கிறது.

★ விஞ்ஞான முறைப்படி டிசைனிடப்பட்டு சிறந்த முறையில் செம்மையாக நிர்மாணிக்கப்பட்டது;

★ கரடுமுரடான ரஸ்தாக்களிலும், எந்த சீதோஷ்ண நிலையிலும் பாதிக்கப்படாது நீடூழிகாலம் உழைக்கக் கூடியதாக உருவாக்கப்பட்டது.

★ தினசரி சவாரிக்கு ஏற்றதாக நல்ல உறுதியானது எனினும் கனம் குறைந்தது. கோளாறற்ற சேவையைப் பெற்று மகிழ்ச்சியடையலாம்.

இதனால்தான் கூடுதல் சைக்கிள் பாவனையாளர்கள் விரும்பி தெரிவு செய்வது

**பிலிப்ஸ் சைக்கிளை**

**கொழும்பு ஏஜன்ஸீஸ் லிமிட்டெட்.**
355, டின்ஸ் ரேட், கொழும்பு. போன்: 94211.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர். எஸ். ஜோன் வாஸ்,
கொழும்பு

கே: எனக்கு வயது 26: சுதந்திரன்மூலமாக எனக்கு ஒரு மனைவியைத் தேடித் தர முடியுமா?

ப: முடியும்; ஆனால் உங்கள் வயதைவிட உங்கள் வங்கி நிலை என்ன என்பது தான் முக்கியம். அதை முதலில் வெளியிடுவீர்களா?

ஃ

மூ. சுந்தரலிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: தனக்கு எத்தனை குழந்தைகள் வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை தன்னுடையது என்கிறாள் என் மனைவி. நான் என்ன செய்யட்டும்?

ப: குறைய வேண்டும் என்கிறாளா? அதிகம் வேண்டும் என்கிறாளா? குறைய வேண்டும் என்றால் அவள் பேச்சைக் கேட்பது நல்லது. கூட வேண்டும் என்றால் எட்ட இருப்பது நல்லது.

ஃ

க. கந்தையா, மட்டக்களப்பு

கே: நான் ஒரு கவிஞன். பிழைப்புக்கு வழியில்லை. என்ன செய்யலாம்?

ப: "மரவள்ளிக் கிழங்கு மகாத்மியம்" என்று ஒரு காவியம் பாடும். மந்திரி விமலா விஜயவர்த்தனாவின் கடாட்சம் கிடைக்கும்.

ஃ

கே. எஸ். ராஜன்,
நாவலப்பிட்டிய.

கே: அரசியல் வாதிகளை விட நாய் சிறந்தது என்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நான் அதை மறுக்க விரும்பவில்லை. நாயிடம் விசுவாசம் என்று ஒன்று உண்டு. அரசியலவாதிகளிடம் அது மருந்துக்கும் கிடையாது.

ஃ

பி. எஸ். ராஜேஸ்வரி, சுன்னாகம்

கே: தங்களுடைய சிறந்த நண்பர்கள் யார்?

ப: என் அலுமாரியில் உள்ள புத்தகங்கள்.

ஃ

கே. எம். சுப்பையா,
சாவகச்சேரி

கே: தமிழ்த் தலைவர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்று நான் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப்போகிறேன். என்ன சொல்கிறீர்?

ப: யோசித்து செய்யும். உமக்குக் 'குளுக்கோஸ்' தருவதற்கு தமிழ் மக்களிடையே யாரும் இல்லை. எனவே உமது இன்ஷூரன்ஸ் பொலிஸியை யாருக்காவது எழுதி வைத்துவிட்டு ஆரம்பிப்பது புத்தியாய் இருக்கும்.

ஃ

ராஜு. ராஜேஸ்வரி,
கொங்கித்தோட்ட

கே: திரு செல்வநாயகத்தையும், திரு பொன்னம்பலத்தையும் ஓடவிட்டால் யார் வெல்லுவார்கள்?

ப: நிச்சயமாகத், திரு பொன்னம்பலந்தான் வெல்லுவார். திரு செல்வநாயகத்திற்கு ஓடிப் பழக்கம் கிடையாது. காலிமுகச் சத்தியாக்கிரகத்தின்போது ம் அவர் மலைபோல் நிலை பெற்று வீற்றிருந்தார். நாரந்தனைக் கூட்டத்தில் கூடத் திரு பொன்னம்பலம் தலைவரையும் முந்திக் கொண்டு ஓடி வெற்றியீட்டினார் என்று சொல்லப்படுகிறது.

ஃ

ப. குருமூர்த்தி. பருத்தித்துறை

கே: படுக்கை அறையிலே மலர்கள் அவசியமா?

ப: மிகவும் அவசியம். மயக்க நிலையில் இருக்கும் கணவன் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளாமல் இருப்பதற்கு மலர்கள் எச்சரிக்கைப் பொருட்களாக அமைகின்றன.

ஃ

எஸ். எம். யோகேஸ்வரன்,
கைதடி

கே: பிராந்திய சபை என்றால் என்ன?

ப: தமிழ் மக்களின் மனப் பிராந்தியைப் போக்குவதற்காக பண்டா அளிக்கும் வரப்பிரசாதம் என்று வியாக்கியானம் தருகிறார்கள் தமிழரசுக் கட்சியினர்.

> மிஸ்டர் குயுக்தியார்
> C/O சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு—12.

ஃ

வி. பாஸ்துரை, அட்டன்

கே: மனத்துயரை மாற்றுவது மதுவா? மங்கையா?

ப: இரண்டுமில்லை. மறதி!

ஃ

செல்வி ச. லதாதேவி,
ஹெந்தலை

கே: "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்று சொல்கிறார்களே அதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

ப: இதுகாலவரை ஒப்புக் கொண்டுதான் இருந்தேன். இப்போது ருஷியாவின் செஞ்சந்திரன் வானில் மணிக்கு 18,000 மைல் வேகத்தில் அசையத் தலைப்பட்ட பின் கொஞ்சம் சந்தேகம் தட்டியிருக்கிறது.

கே: கவலைக்கு வித்து எது?

ப: கவலைக்கு வித்து பற்று என்றார் புத்தர் பகவான்.

ஃ

எப். ஜே. ஜோன், கொச்சிக்கடை

கே: அன்னதானம், பூதானம், கோதானம், வித்தியாதானம் இவற்றுள் எல்லாம் தலைசிறந்த தானம் எது?

ப: என்றென்றும் சமாதானத்தை நிலைநாட்டவல்ல நிதானமே சாலச்சிறந்ததாகும்.

ஃ

கமலபாஸ்கரன், கோப்பாய்

கே: பண்டாவின் மந்திரி சபையில் 'கனம்'கள் உண்டா?

ப: ஆம் உண்டு. கனம் பொருந்திய மந்திரி ஜனாப் சூயஸ் மரிக்கார் இருக்கிறார். கனம் தாங்கும் மந்திரி விமலா விஜயவர்த்தனாவும் இருக்கிறார்.

ஃ

பி. எம். நாகூர் கனி,
நேர்யகுளம்

கே: நம்பி நடந்ததில் தோல்வி அடைந்து விட்டேன். என்ன செய்யவேண்டும்?

ப: இனிச் செய்வதொன்றுமில்லை. நீர் ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலக் கவிஞரைப் படியாததால் வந்த வினை இது. "நம்ப நட; நம்பி நடவாதே!" என்பது அவர் செய்துள்ள அரிய போதனையாகும்.

ஃ

க. தர்மரட்னம், மானிப்பாய்

கே: தற்காலத்தில் மழை ஏன் ஒழுங்காகப் பெய்கிறதில்லை?

ப: "கோன்முறை தவறினால் வான்முறை தவறும்" என்பது பழமொழியல்லவா?

ஃ

சி. பொன்னுத்தம்பி,
செங்கலடி

கே: விஷத்திலும் கொடியது எது?

ப: தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சிங்களக் குடியேற்றம்.

ஃ

இ. நாகராஜா, முரசுமோட்டை

கே: தங்களுக்கு ஒருபெண் லிகிதர் தேவை என அறிந்தேன் அது உண்மையா?

ப: ஆமாம் பெண்ணே, அது உண்மைதான். ஆனால் உன்னுடைய பெயர் எனக்கு சந்தேகத்தைத் தருகிறதே. நீர் ஆணா, பெண்ணா?

ஃ

கே. செல்வத்துரை, கரவெட்டி

கே: சந்திரமண்டலத்தில் இடங் கண்டுபிடிப்பதற்காக ருஷியர்கள் ஏன் இவ்வளவு தூரம் துடியாய்த் துடிக்கிறார்கள்.

ப: அதிகாரத்தில் இருப்பவர்களால் நிராகரிக்கப்பட்டு "துரோகி"ப் பட்டம் சாட்டப்பட்டவர்களை நாடு கடத்த ஒரு தூரத்துத் தீவாந்திரம் அவர்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது.

ஃ

எம். தியாகேஸ்வரி,
தம்பலகாமம்

கே: குயுக்தி அத்தான், உங்கள் முகவடிவைக் கண்டு மோகமுற்றேன். என் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடுவீர்களா?

ப: முந்நூறு வேண்டுமானாலும் போடுகிறேன். ஆனால் எனக்கு ஒருத்திக்குமேல் சோறு போட முடியாதே என்றுதான் கவலைப்படுகிறேன்.

ஃ

தமிழ்நேசன், கண்டி

கே: சி. என். அண்ணாத்துரைக்கும் ஆர். பி. சேதுப்பிள்ளைக்கும் வித்தியாசம் என்ன?

ப: அண்ணாத்துரை சிந்தனையாளர்; சுயமாகச் சிந்திக்கக்கூடியவர். சேதுப்பிள்ளை விரிவுரையாளர்; பிறர் சிந்தித்து வைத்தவற்றிற்கு வியாக்கியானம் தரக்கூடியவர்.

ஃ

வே. திருநாவுக்கரசு,
வெள்ளவத்தை

கே: பெயரில் அழகு சுந்தரமாய் இருக்கும் சிலர் மனத்தில் அழுக்கு சுந்தரமாய் இருக்கிறார்களே, என்ன செய்வது?

ப: என்ன செய்வது சவர்க்காரப் பெட்டிகளின் மத்தியில் கொண்டு போய்த் [illegible] அழுக்கு [illegible] ளாக்க முடியாது.

---


# தீபாவளிப் பண்டிகையின் நல்வாழ்த்துக்களை

எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உங்கள் தீபாவளிப் பண்டிகைக்குரிய எல்லாவிதமான

பெங்களூர், சேலம், காஞ்சிபுரம், பெனாரிஸ் பட்டு சேலைகளும், சோளி தினுசுகளும், கோயமுத்தூர், ராசிபுரம், மதுரை, சின்னாளம்பட்டி, அருப்புக்கோட்டை, உறையூர், சென்னிமலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, $40^{S}$ $100^{S}$ நெ. வரையுள்ள சேலை தினுசுகளும், பாம்பே வொயில் சாரி, "மணிபுரி" சாரி ரகங்களும் இதர சித்தை சேட்டிங், கோட்டிங், வேஷ்டி சால்வை ரகங்களும் மிகக் குறைந்த விலையில் இறக்குமதி செய்து குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறோம்.

தங்கள் தேவைகளுக்கு இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள எங்கள் ஸ்தாபனத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்.

V. P. P. ஆடர்கள் முற்பணமிருப்பின் கவனிக்கப்படும்.

## கே. வெங்கடேசன்,

71-73, செட்டியார் தெரு, கொழும்பு.

*T'Phone:* 5847.

*BRANCH:-*

**148, Lower Street, Badulla.**



**USE**

Always For Best Health




தீபாவளிக்கு

## பாஸ்கோ பாலைப்

பாவியுங்கள்.

தினசரி இருமுறை ஒவ்வொரு வீட்டு வாசலிலும் விநியோகம் செய்யப்படுகின்றது.

கொழும்பு மெயின் வீதியில் பாஸ்கோ பால் அருந்துமிடம் ஒன்று திறந்து வைத்திருக்கின்றோம்.

கொட்டாஞ்சேனையிலும் கிருண்பாஸிலும், சின்ன பொறளையிலும் இன்னும் ஏனைய வீதிகளிலும் பாஸ்கோ பால் அருந்துமிடங்கள் திறக்கப்படும்.

## கொழும்பு கூட்டுறவு பால் சமாசம் லிமிட்டெட்,

"மில்க் ஹவுஸ்"

19, ஸோண்டர்ஸ் பிளேஸ், கொழும்பு-12.

போன்: 3046.


வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்வா ராணி

பாத அணிகள்



பாத அணிகள்

பெண்களே! உங்கள் மெல்லிய பாதத்திற்கு ஏற்ற, சிறந்த அழகான 'சின்வா ராணி' பாத அணிகளையே எப்பொழுதும் உபயோகியுங்கள்.

★ நவீன மோஸ்தர் ★ சரியான அளவு
★ மிகச் சிறந்த பாவனை ★ குறைந்த விலை

தயாரிப்பாளர்கள்:—

**சிலோன் மலேயன் றபர் குட்ஸ் லிமிட்டெட்,**
தெஹிவளை.


## கல்வியே கருந்தனம்


# உஷா



## தீபாவளிப் பண்டிகையின் நல்வாழ்த்துக்களை

எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், அன்பர்களுக்கும் மிகவும் சந்தோஷத்துடன் அறிவிக்கின்றோம்.

ஒவ்வொரு வீட்டிலும் உஷா தையல் மெஷின்களே கேட்கிறார்கள்.

| | |
|---|---|
| கை மாடல் | ரூ. 195/- |
| டிறெடில் மாடல் | ரூ. 315/- |
| போல்டிங் மாடல் | ரூ. 335/- |

மாதாந்தர தவணையில்:

| | முதலில் முற்பணம் | மாதாந்த தவணை | | | |
|---|---|---|---|---|---|
| கை மாடல் | ரூ. 50/- | ரூ. 12/50 | விகிதம் | 18 | மாதங்கள் |
| டிறெடில் மாடல் | ரூ. 75/- | ரூ. 19/50 | ,, | 18 | ,, |
| போல்டிங் மாடல் | ரூ. 75/- | ரூ. 21/50 | ,, | 18 | ,, |

சோல் ஏஜண்டுகள்:

**ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,**
17, புதிய சோனகத் தெரு,
கொழும்பு.

டெலிபோன்: 6069.


தோட்டத் தொழில் தேசிய மயம்:

# 'மலை நாட்டு தமிழ்-சிங்கள மக்களின் நல்லுறவை குலைக்கும்

# சிங்களவர்களின் வேலையில்லாப் பிரச்னையைத்தீர்க்கஉதவாது'

## தொழில் மந்திரியின் உத்தரவு பற்றி இ. ஜ. தொ. கா. காரியதரிசி

"இன்றைய நிலையில் தோட்டத் தொழிலை இலங்கையர் மயமாக்கும் கொள்கை ஜனநாயகத்துக்கும் சர்வதேசச் சட்டங்களுக்கும் முற்றும் முரணானது என்பதைத் தொழில் மந்திரி உணர வேண்டும்.

இக்கொள்கை மலைநாட்டில் வாழும் தமிழ்—சிங்கள மக்களின் அந்நியோன்ய நேச உறவைக் குலைத்து அவர்களிடையே பகையையும் பூசலையும் வளர்த்து நாட்டை ரண களமாக்க உதவலாமே தவிர உள்ளூர் (சிங்கள) வாசிகளின் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க கிஞ்சித்தும் உதவமாட்டாது."

இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுக் காரியதரிசி திரு. கே. ஜி. எஸ். நாயர் தொழில் மந்திரி திரு இலங்கரத்தின அண்மையில் வெளியிட்ட 'தோட்டத் தொழிலைத் தேசிய மயமாக்கும் உத்தரவு' குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்.

திரு நாயர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

### உரிமைகள் புறக்கணிப்பு

"தொழில் மந்திரியின் இந்த உத்தரவால் பரம்பரை பரம்ரையாக தோட்டங்களில் வேலை செய்து வரும் இந்தியத் தொழிலாளர்களுக்கு இப்போதே ஆபத்து நேர ஆரம்பித்து விட்டது. மந்திரியின் உத்தரவைத் தமக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு பல தோட்ட முதலாளிமார் பல தொழிலாளர்களின் சட்ட ரீதியான உரிமைகளைக் கூடப் புறக்கணித்து அவர்களுக்கு தொடர்ந்து வேலை வசதி கொடுக்க மறுத்து வருகிறார்கள். இவர்களின் நிலையே இப்படியென்றால் இவர்களின் வழி வரும் குழந்தைகளின்—இளம் சந்ததியாரின் நிலை என்னவாகும் என்பதை யாரும் தாமாகவே தெரிந்துகொள்ளலாம்.

### சுரண்டல்

"தொழில் மந்திரியின் உத்தரவால் தோட்ட முதலாளிமார் சுரண்டல் நடத்த இப்பொழுதே வழி பிறந்து விட்டது. அடுத்து என்ன நடக்குமென்பதும் ஓரளவு வெளிச்சமாகிறது.

### மந்திரி புனராலோசனை செய்ய வேண்டும்

"சிங்களத் தொழிலாளர்களுக்கு வேலை வசதி செய்து கொடுத்து அவர்களின் நல வாழ்வுக்கு வழி வகுக்க வேண்டுமென்பதில் அரசாங்கத்துக்கு உள்ள அக்கறையளவு நமது ஸ்தாபனத்துக்கும் உண்டு. ஆனால் அதற்காக பரம்பரை பரம்பரையாக தோட்டங்களே தமக்குத் தஞ்சமென்ற மன நிலையில் அங்கு பாடுபட்டு உழைத்துண்டு வாழும் இந்தியத் தொழிலாளர்களை உதைத்துத்தள்ள வேண்டும் என்பதல்ல. எனவே தொழில் மந்திரி தமது முடிவைப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன்."

இவ்வாறு திரு. நாயர் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

### சுதந்திரன் செய்தி

தொழில் மந்திரி இலங்கரத்தினவின் தோட்டத் தொழிலை தேசிய (சிங்கள) மயமாக்கும் நடவடிக்கை பற்றி சுதந்திரன் எல்லாப் பத்திரிகைகளுக்கும் முன்னதாக 25-8-57-ல் செய்தி வெளியிட்டு தமிழ் பேசும் மக்களை இது விஷயத்தில் எச்சரித்திருந்ததும் பின்னர் 29-9-57-ல் தினப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைக் கொண்டு சுதந்திரன் முந்தித்தந்த செய்தியை ஊர்ஜிதப்படுத்தித் தமிழ் பேசும் மக்களை மேலும் விழிப்புடன் இருக்கத் தூண்டியதும் வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

நகைச் சுவை கட்டுரை

# 'டுப்பிளிக்கேட்' சந்திரன்

நகைச் சுவை குமரன்

மாலை ஆறரை மணியிருக்கும்; பல குரல்கள் என் காதைப் பிய்த்தெடுக்க ஆரம்பித்தன... "அதோ போகிறது" ......"இதோ வருகிறது"...."சுழல்கிறது பார்!" இப்படியாகப் பல பல குரல்கள். சிறு, சிறு கூட்டங் கூட்டமாகச் சில மக்கள் வானத்தைப் பார்த்தவாறு ஓடிக்கொண்டிருந்தார்கள்......

நானும் ஆகர்ஷணசக்தியால் இழுக்கப்பட்ட பொருளைப் போல அந்தக் கூட்டத்தைப் பின் தொடர்ந்து ஓடினேன். அடடா! செயற்கைச் சந்திரனைப் பார்த்துக் கொண்டே ஓடியதன் பயன் என்னையறியாமலே அந்த ஆலயத்துள் எல்லவா நுழைந்துவிட்டேன்...?அங்கு அர்ச்சகரோடு ஒரு பக்தர் நடாத்திக்கொண்டிருந்த சம்பாஷணைதான் எவ்வளவு ருசிகரமானது......!

"ஐயா வீட்டிலே பையனுக்கு ஒரே நோயும் நொடியுமாயிருக்கிறது. கிரகந்தான் பகைத்திருக்கென்று பலர் சொல்லுகிறார்கள். இந்தா [illegible] துக்கும் அர்ச்சனை பண்ணிடுங்க" இது பக்தரின் (குரல்).

இப்போது அர்ச்சகரின் முகம் வழக்கம்போலில்லை. அவர் அளித்த பதிலே புதுரகமாக இருந்தது......"இன்னும் ஓர் பத்துச் சதம் வேண்டும் அப்பனே...இப்போது நவக்கிரகம் தசக் கிரகமாக மாறிப்போச்சில்லையா? ருஷ்யாக்காரனுங்கல்ல ஒரு புதுக் கிரகத்த உற்பத்தி பண்ணிட்டாங்க"

அர்ச்சகரின் பதிலைக் கேட்டு அடைந்த வியப்பில் மேலும் ஓடினேன்....எதிரில் தென்பட்டது அந்தக் குளம். வழக்கமாக இரவில் மலரும் அந்த அல்லிப் பெண்ணின் வதனம், அன்று சிரிக்கவில்லை. அவளின் காதலனான சந்திரனுக்கு எதிராக ஒரு வில்லன் தோன்றினால் அவளுக்கு எப்படி மகிழ்ச்சி இருக்க முடியும்?

குளக்கரையிலே 'களீர்' என்றெழுந்த சிரிப்பொலி என் கவனத்தைக் கவர்ந்தது. காதலரிருவர் பேசி மகிழ்ந்துகொண்டிருந்தனர்.

காதலன்:-"வடிவழகி! உன் வதனத்தில் வட்ட முழுச் சந்திரனைக் காண்கின்றேன் கண்ணே!"

காதலி:-"அத்தான்! எந்தச் சந்திரனைக் குறிப்பிடுகிறீர்கள்? ருஷ்யா விட்ட செயற்கைச் சந்திரனைத்தானே......?"

என் தலை சுழன்றது. இந்த 'டுப்பிளிக்கேட்' சந்திரனைப் படைத்த விஞ்ஞானிகள் எத்தனை மாற்றத்தைச் செய்துவிட்டார்கள் என்று எண்ணிக்கொண்டு மேலும் ஓடினேன்... திண்ணையில் உட்கார்ந்த பின்புதான் அது ஒரு சோதிடரின் வீடு என்பது தெரியவந்தது. சோதிடரும் தன் தொழிலை நடத்திக்கொண்டிருந்தார்.

"கேளுங்க முதலாளி ஐயா! அதாகப்பட்டது மேலும், மேலும் உங்க முதல் வளருவதற்கும், செல்வம் குவியிறத்திற்கும் வியாழதிசை இருக்குத்தான் ஆனு...... ஒன்பதாமிடத்தில் சந்திரப் பயல் பகைச்சதால ...உங்க முன்னேற்றம் கொஞ்சம் முறியுது".

"இந்தக் கொம்யூனிஸ்டுக்கள் விட்ட சந்திரனைத் தானே சொல்லுகிறீங்க?" என்றார் முதலாளியார்.

'சாத்திரியாரின் வீட்டில் கூட. 'டுப்பிளிக்கேட்' சந்திரன் பிரச்னையா' என்று எண்ணியவாறு தூரத்தில் எழுந்த தேவார இசையைக்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ. ஜீ. யின் இனுவில் கூட்டம்:

# பணம்! பொலீஸ்!! சாராயப்புட்டி!!!

## சமயசஞ்சீவிகளாக உதவின

—o—

## உற்ற போரில் பக்கம் நிற்க மாட்டாதவர்களும் மாஜி யு. என். பி. களும் மட்டுமே ஆதரவு

—:0:—

### அவர்களுக்குள்ளும் முடிவில் பணம் பங்கு வைப்பதில் பிணக்கும் புழுக்கமும்

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இனுவில் என்ற கிராமத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சி சார்பில் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கடந்த 6-10-57-ல் ஒரு பொதுக் கூட்டம் நடத்திய தாகத் தினப் பத்திரிகைகளில் செய்திகள் பிரமாதப்பட்டன. அந்தக் கூட்டம் எப்படி ஏற்பாடு செய்யப்பட்டது, அங்கு நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் யாவை என்பனவற்றை யாழ்ப்பாணத்திலுள்ள சுதந்திரன் அந்தரங்க நிருபர் ஒன்று விடாமல் திரட்டி நமக்கு அனுப்பி வைத்துள்ளார். அவற்றை நமது நேயர்களுக்கு இங்கு சமர்ப்பிக்கிறோம்.

இனுவில் கிராமத்தில் ஒரு கூட்டத்தை வைத்து பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்க்க வேண்டும் என்று திரு. பொன்னம்பலம் நீண்ட நாட்களாகப் பாடுபட்டு வந்தார். இதற்காக வேண்டி அவர் முன்பு ஒரு தடவை இனுவிலில் நடந்த ஒரு வீடு குடிபுகு விழாவிற்கு விஜயம் செய்து அங்கு அரைத் திட்ட அரசியல் கூட்டம் ஒன்றை நடத்திய விவரம் சுதந்திரன் நேயர்கள் அறிந்ததே.

#### அழையா வீட்டில் நுழைந்தார்

இதன் பின்னர் அவர் சில வெளியூர் ஆட்கள் மூலம் இனுவிலில் ஒரு கூட்டம் நடத்திவிட முயற்சி செய்து வந்தார். அத்தோடு அழையா வீட்டில் நுழையா விருந்தினராக அவரே பல வீடுகளுக்கும் சென்று ஒரு கூட்டம் நடத்தத் தனக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொண்டார். "ஒரு காலத்தில் தேடியும் அடிமுடி காணமுடியாதஎங்கள் தமிழ்த்தலைவர் இன்று எங்கள் காலடிக்குத் தேடி வருகிறாரே, இது தான் காலத்தின் கோலம்" என்று சிலர் பேசிக் கொண்டார்கள்.

#### பழைய யூ. என். பிகாரர்

இனுவிலில் கூட்டம் நடத்துவதற்கு திரு. ஜீ. ஜீக்கு ஓரளவு உதவியாய் நின்றவர்கள் இரு சாரார். ஒரு சாரார் பழைய யு. என். பி. காரர்கள். தமிழரசைத் தாக்க வகையற்றுப் பதுங்கிக்கிடந்த இவர்கள் பொன்னம்பலத்தை ஒரு "பொல்லாக" உபயோகிக்கலாம் என்ற கள்ள எண்ணத்தோடு திரு. ஜீ. ஜீக்கு ஆதரவளித்தனர், கூட்டம் ஏற்பாடு செய்ய.

#### உற்ற போரில் பக்கம் நிற்க மாட்டாதவர்கள்

மற்றொரு சாரார் இங்குள்ள கோவில் வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டவர்கள். அவர்களுடைய அரசியல் அபிமானமும் கொள்கையும் எப்படியிருந்த போதிலும், திரு. பொன்னம்பலம் என்ற அட்வகேட்டுக்கு உதவி செய்து அதன் மூலம் கோவில் வழக்குக்கு அவர் உதவியைப் பெறப் பண்டமாற்றுத் திட்டம் வகுத்தவர்கள் இந்த மகானுபாவர்கள். உற்ற போரில் இவர்கள் திரு. ஜீ. ஜீ. யின் பக்கம் நிற்க மாட்டார்கள் என்பதும் கட்சி மாறிவிடுவார்கள் என்பதும் உறுதி. இதைத் திரு. பொன்னம்பலம் சீக்கிரத்தில் அறிவார்.

#### தலைமை வகிக்க தேடி அலைபவர்

பிரஸ்தாப கூட்டத்திற்குத் தலைமை வகித்த பெருமகனுரைப் பொன்னம்பலமும், திரு. பொன்னம்பலத்தை அவரும், வானளாவ மாறி மாறிப் புகழ்ந்து சால்வை மாற்றிக் கொண்டனர். ஆனுல் அந்த தலைவர் யார், எப்பேர்ப்பட்டவர் என்பதை ஊரவர்கள் நன்கறிவர். நல்லது கெட்டது, என்பதைச் சுயமாக உணர முடியாதவர் அவர். தலைமை வகிப்பதில் ஆசை கொண்டவராகையால் எதற்கும் எங்கும் தலைமை வகிக்க முன் வருவார். இதுவரை அவர் இராத கட்சிகள் இல்லை. இனிமேலும் அவர் எந்தக் கட்சிக்குப் போவார் என்பதும் நிச்சயமில்லை.

#### பொலீஸ் படை சாராயப் புட்டி உதவி

இவ்வளவு இருந்தும் உண்மையில் கூட்டத்தை நடத்த உதவியாய் இருந்தவை ஆயுதந் தாங்கிய பொலீஸ் படையும், சாராயப் புட்டிகளுமே.

இனுவில் கந்தசாமி கோயில் வீதியில் 6-10-57-ல் தமிழ் காங்கிரஸ் கூட்டம் நடைபெறும் என்று துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருந்தது. கோயில் வீதியில் தமிழ் காங்கிரஸ் கூட்டம் நடைபெறுவதை ஊர் மக்கள் விரும்பவில்லை. எனவே அவர்கள் பொலீசுக்குப் புகார் செய்தனர் கூட்டம் நடந்தால் குழப்பம் விளையலாம் என்ற பயத்தில். சனிக்கிழமை பிற்பகல் பொலீஸார் வந்து கோயில் வீதியில் கூட்டம் நடத்த வேண்டாம் என்று எச்சரித்து விட்டுப் போனதாக அறியப்படுகிறது.

#### ரூபா 100/ வாடகையில் இடம்

இந்த நிலையில் கூட்டம் வைக்க இடமில்லாமல் தவித்தார்கள் தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்கள். கோயில் முன் உள்ள திரு. இராமுப்பிள்ளையின் காணியில் வைக்க கேட்ட போது முதலில் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் பின்னர் ரூபா200/- தந்தால் அனுமதிப்பதாக சொல்லப் பட்டதாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது. முடிவில் ரூ. 100/- வாடகை கொடுத்து இடம் எடுக்கப் பட்டதாம்.

#### மயக்க நிலையில் ஜீ. ஜீ. யின் கையாட்கள்

ஞாயிற்றுக்கிழமை: அன்று மாலையில்தான் கூட்டம். நாலரை மணியளவில் இரண்டுலொறிகளில் பொலீஸார் வந்து சேர்ந்தார்கள். ஆறு மணிக்கு மேலும் இரண்டு லொறிகள் வந்து சேர்ந்தன. ஆறரை மணிக்கு கூட்டம் ஆரம்பமாகியது.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்பதாக ஜீ. ஜீ. யின் கையாட்கள், [illegible] கள் என்று வர்ணிக்கப்படும் ஒரு கும்பல் சுன்னுகப் பக்கம் இருந்து வந்து சேர்ந்தது. இவர்கள் வந்ததும் சிப்பாய்கள் போல் மேடையைச் சுற்றி நிறுத்தப்பட்டார்கள். இவர்களில் பலர் மதுவருந்தி மயக்க நிலையில் காணப்பட்டார்கள். சிலர் நிமிர்ந்து நிற்க முடியாமல் படுத்துக் கொண்டார்கள்.

#### கூட்டத்தில் கற்கள்

சிறிது நேரத்தில் இரண்டொரு கற்கள் கூட்டத்தில் வந்து விழுந்தன. சிறு பரபரப்பு ஏற்பட்டது. யாருக்கும் கற்கள் படவுமில்லை; காயங்கள் ஏற்படவுமில்லை.

#### ஏகப்பட்ட பொலீஸாரும் ஜீ. ஜீ. யின் பொய்க் கோபமும்

கூட்டத்தில் ஜனங்கள் மிகக் குறைவாக இருந்தனர். ஆனுல் நான்கு ஐந்து டஜன் பொலீஸார் அங்கு வட்டமிட்டனர். கூட்டம் குழம்பலாம் என்ற பயத்தினுல் அவ்வளவு பொலீஸாரும் வரும்படியாக இரகசிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத்தான் திரு. பொன்னம்பலம் கூட்டத்திற்கு வந்தார் என்று பேசிக் கொள்ளப்பட்டது. ஆனுல் திரு. பொன்னம்பலம் மேடையில் பேசும் போது "பக்தா, இதுவா பரலோகம்?" என்று கேட்ட எத்தனைப் போல் "இத்தனை பொலீஸாரும் ஏன் வந்திருக்கிறார்கள்? யார் இவர்களை இங்கு வரச் சொன்னது?" என்று பொய்க் கோபம் காட்டிக் கொண்டார்.

கூட்டத்தை நோக்கிக் கேள்வித் தாள்கள் படை

(8-ம் பக்கம் பார்க்க)

ஆசிரிய கலாசாலை
பிரவேசப் பரீட்சை 1958
அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் பயில்வதன்மூலம் மேற்படி பரீட்சையில் சுலபமாகத் தேறி நீங்களும்
ஒரு ஆசிரியராகலாம்!
எனவே காலந் தாழ்த்தாது உடனே சேருங்கள்
★ பரீட்சை விவரம்
★ பரீட்சைப் பெறுபேறு
★ புதிய பாடத் திட்டம்
வேண்டுவோர் விண்ணப்பித்தால் இலவசமாக அனுப்பப்படும்.
அற்லஸ்ஹோல், தபால் பெட்டி: 649.
போன்: 9759. கொழும்பு.

எங்கள் வியாபாரிகளுக்கும், வாடிக்கைக் காரர்களுக்கும் தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக!
9000 இங்கிலிஷ் வெள்ளை மல்
★ புடவை வியாபாரிகளும், புடவை வாங்குபவர்களும் "9000" இங்கிலிஷ் துணி விற்பனை செய்யப்படுவதைக் குறித்து எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.
★ மல் புடவை வாங்குவதற்கு முன்னுல் அசல் ரக மல் முகப்பில் எச். ஜே. பப்பி அன் கம்பெனி என்ற எங்கள் பெயர் முகவரியிடப் பெற்றிருப்பதையும் மயில் உருவ வெள்ளி நிற லேபல் ஒட்டப் பட்டிருப்பதையும் தயவுடன் கவனியுங்கள்.
★ "9000" இங்கிலிஷ் மல் அசல் ரகம் — இங்கிலாந்திலுள்ள ஒரே ஒரு உற்பத்தியாளர் ஏற்றுமதியாளரால் இலங்கைக்கு அனுப்பப் பட்டு வருகிறது. அந்த ரகம் இலங்கையில் H. J. Pappe & Company யாரைத் தவிர வேறு எவருக்கும் அனுப்பப்படுவதில்லை.
★ 1892ம் ஆண்டு முதல் எச். ஜே. பப்பி அன் கம்பெனியே அசல் ரகமான "9000" இங்கிலிஷ் மல்களுக்கு சோல் ஏஜெண்டுகளாக இருந்து வருகின்றனர்.
★ "9000" இங்கிலிஷ் வெள்ளை மல் வேறு எவராலும் இலங்கையில் வருவிக்கப்பட முடியாது என்பதை வியாபாரிகளுக்கும் மற்றும் எல்லோருக்கும் அறிவிக்கின்றோம்.
★ போலி ரக மல் சில இறக்குமதியாளரால் வருவிக்கப்பெற்றிருக்கிறது. எனவே அந்த ரகத்தில் ஏமாந்து போகாமல் இருக்கும்படி வியாபாரிகளுக்கும், மற்றுமெல்லோருக்கும் அறிவிக்கின்றோம்.
இறக்குமதியாளர்கள்:- ஏக விநியோகஸ்தர்கள்:-
எச். ஜே. பப்பி & கம்பெனி,
80, இரண்டாம் குறுக்குத் தெரு, புறக்கோட்டை, கொழும்பு.
போன்: 3474. தந்தி: "PAPPECO"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் : 2

சென்ற வாரத் தொடர்ச்சி

# பூமியின் அமைப்பு விநோதமும்

## அதை அறியும் நுட்பமும்

## நில நடுக்கம் புலப்படுத்தும் உண்மைகள் -மூன்றுவித அலைகளின் தன்மைகள்

### உள்ளிருக்கும் வெப்ப நிலையும் உலோகச் செறிவும்

உங்களைப்பற்றியும் உங்களைச் சுற்றியுள்ள தாவரங்கள், பிராணிகளைப்பற்றியும் நிறைய அறிந்துள்ளீர்கள். என்னைப்பற்றி—என் உள்ளே என்ன என்ன இருக்கிறது, எவ்விதமான அமைப்புகளுடன் இருக்கிறேன் என்பன போன்றவையும், அவற்றை எவ்விதம் அறிய முடிகிறது என்பதையும் இங்கு கூறுகிறேன்.

என் பூமத்திய ரேகைக் குறுக்களவு 7926.7 மைல். துருவங்களின் குறுக்களவு 7900 மைல். இரு துருவங்களுக்கிடையிலுள்ள தூரம் பூமத்திய ரேகைக் குறுக்களவுக்கு 26.7 மைல் குறைவானது.

நான் நீண்டகாலமாக ஏறத்தாழ 2,000,000,000 ஆண்டுகளாக ஒரேவேகத்தில்-சுமார் மணிக்கு 1000 மைல் வேகத்தில்-என் உருவத்தில் எவ்வித மாற்றமுமில்லாமல் சுற்றிக்கொண்டிருக்கிறேன்.

### வெப்பமும் அழுத்தமும்

என்னைப்பற்றி அதிகமான திட்டவட்டமான விவரங்களை நீங்கள் அறிய முடியாத காரணம் மற்ற பொருள்களைப்போல என்னை நீங்கள் நேரே பார்க்க முடியாதது தான். உங்கள் உடம்பினுள் இருப்பவற்றை எக்ஸ்—ரே மூலமும், இறந்துபோனவரின் உடலை அறுத்துப் பார்ப்பதன்மூலமும் அறிய முடியும். ஆனால் என் உள்ளே இருப்பவற்றை எவ்வாறு அறுத்துப் பார்ப்பது? அல்லது எந்த எக்ஸ்—ரேயின் மூலம் அறிவது? இயலாத காரியம். உங்களால் என் உள்ளே அதிக அளவு 3 மைலுக்கு மேல் செல்ல முடியாது. ஆனால் என்னைப்பற்றி நீங்கள் நேரடியாக அறிய முடியாவிட்டாலும், ஊகிக்க முடியும், இயற்கை சாதனங்களாகிய நிலநடுக்கம் (Earth-quake), எரிமலை (Volcano), கனபரிமாணம் (Density), எரிகற்கள் (Meteoric infold) முதலியவற்றின் உதவியால்.

ஏறத்தாழ 100 அடிக்கு 1 டிகிரி வீதம் வெப்பம் அதிகமாகிறது என் னுள்ளே செல்லச் செல்ல. இதே போல அழுத்தமும் அதிகமாறெது. ஆகவே நீங்கள் நினைத்துகூடப் பார்க்க முடி

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

எஸ்ஸாரெம்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

யாத அளவுக்கு, பரிசோதனைச்சாலைகளில் உண்டாக்க முடியாத அளவுக்கு வெப்பமும் (Heat), அழுத்தமும் (Pressure) அதிகமாகின்றன என்னுள்ளே மையத்தில்!

### மூன்று பகுதிகள்

நான் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறேன் ஆப்பிள் பழத்தைப் போல. வெளித்தோல் (மிக இலேசானது); தின்னக்கூடிய நடுப்பகுதி; நடுவில் அமைந்திருக்கும் விதைப் பகுதி என்று ஆப்பிள் மூன்று பாகமாக இருக்கிறதல்லவா? அதேபோல வெளிப் பகுதி (Crust); நடுப் பகுதி (Intermediate layer); உட்பகுதி (Core) என்று மூன்ருகப் பிரிக்கப்பட்டிருக்கிறேன். அவற்றில் வெளிப் பகுதி மிகக் குறைவான கனமேயுள்ளது. உட்பகுதி குறுக்களவில் பாதி உள்ளது. இவற்றைப் பின்னல் கூறும் காரணங்களால் அறியலாம். நான் இவ்வாறு மூன்று பகுதிகளாக இருப்பதை நீங்கள் அறிவது முக்கியமாகத் திருவாளர் நிலநடுக்கத்தின்மூலமாகத்தான்.

### நில நடுக்கம்

திருவாளர் நிலநடுக்கத்தால் உயிர் இழந்தோர், பொருள் இழந்தோர் ஏராளம்! ஏராளம்!! ஆனல் அவர் தான் என்னை அதிகப்படியாக வெளியில் தெரியும்படி செய்கிறுர் என்றுல் ஆச்சரியமாகத்தான் இருக்கும்! இங்கு திருவாளர் நிலநடுக்கத்தாரைப்பற்றிச் சில சொல்லிவிட்டு மேலே தொடருகிறேன்.

நில நடுக்கம் ஒரு இடத்தில் ஏற்பட்டால், அவ்விடத்திலிருந்து மூன்று அலைகள் (P, S, L என்று மூன்று வகை) கிளம்பி மற்ற இடங்களை அடைகின்றன. இவ் வலைகளில் சேதம் விளைவிக்கும் அலை L அலையே. P அலையும் S அலையும் என் உள்ளே புகுந்து மறுபடியும் வெளிப் பகுதியை அடைகின்றன. L அலை வெளிப் பகுதியிலேயே சுற்றி வருகிறது. இவற்றை 'செய்ஸ்மோகிராப்' (Seismo-graph) என்னும் இயந்திரம் பதிவு செய்கிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### 'மூ' நாட்டு வேந்தரா?

240,000 மக்களைக் கிரோஷிமாவில் அமுக்கிவைத்ததாம் ஓர் அணுக்குண்டு—ஆனல் அதனிலும் பார்க்கப் பொல்லாதது. மெல்ல நடந்து, முறுவல் காட்டிய பெண்கள் போட்டு வைக்கிற அணுக்குண்டுக் கண் வீச்சு. இவை அனைத்தையுமே ஒரு மூலைக்குள் ஒதுக்கிப் பொடி விஷயமாக்கிவிடக் கூடிய வலிமையால் மிகுந்த ஒரு புதுக் குண்டு—'மூவர்' என்ற சொல்லுக்கு ஒரு புது விளக்கம்—சமீப காலத்தில் கிடைத்திருக்கிறது. நான் மேலே காட்டின சான்று கட்கே ஒரு சாட்டை அடி போட்டு, அவற்றின் தலைப்பாகைகளைக் கழற்றி விடப்பார்க்கிறது அவ்விளக்கம்.

'மூ' என்பது பழந் தமிழ் நாட்டின் பெயராம்-'மூவர்' எனப் பாடல்களில் வருவதெல்லாம் 'மூநாட்டவர்' என்ற கருத்தையே தருகிறதாம். ஆதலால் நாம் 'மூவர்' என்ற சொல்லிற்கு மூன்று வேந்தர்கள் எனப் பொருள் கொள்வதெல்லாம் முழு மூடத்தனத்தின் உருப்படியேயாம்- இப்படியாய் அப் புதுவிளக்கம் நம் முதுகிலே ஒரு போடு போடப்பார்க்கிறது.

கேள்வி எழும்புகிறது. இப் புது விளக்கம் சரியா? என்று. பதில், பண்டை நாட் தமிழ் புலவர் பரணர்தான் கூற வேண்டும்.

''சிறப்புடை மரபிற்
பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந்
தோற்றம் போல,
இரு குடை பின்பட ஓங்கி
ஒரு குடை''

எனச் சோழனைப் புகழ்ந்து அவர் பாடும் புறநானூற்றின் முப்பத்தோராவது பாடலிலே, மூன்று வேந்தர்கள் தமிழ் நாட்டை அந்நாளில் முறை கொண்டனர் என்பது தோற்றமாகின்றதன்றே?

இதுகாறும் நாம் கண்டவற்ருல் கிறிஸ்து பிறப்பதற்கு எத்தனையோ நூற்ருண்டுகட்கு முன்னரே மூவேந்தர் தமிழ் நாட்டை ஆளத் தொடங்கிவிட்டனர் என்பதும், அவர் அங்ஙனம் தம் ஆட்சியைத் தொடங்கிய காலத்தைச் சங்க இலக்கியங்கள் கொண்டு அறுதியிட முடியாதென்பதும் தெளிவாகின்றன.


நாரீமணிகளுக்கோர் நற்செய்தி!

பார்த்து நம்பிக்கையடைவீர்களானல்
ஒப்பிட்டுப் பார்த்து திருப்தியடையுங்கள்.



ஒரிஜினல்

சூப்பர் எலைட்

பினிஷ்

ஜார்ஜட்

ஜப்பானிலுள்ள பிரபல விஞ்ஞானிகளால்
அதிநுட்பமாக திறம் நூலினலும் சாயத்தாலும்
தயாரிக்கப்பட்டது.

சாயம் மங்காது, சுருங்காது, மடிப்பு ஏற்படாது.

எங்கள் உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது.

உங்களுக்குத் திருப்தி ஏற்படாவிட்டால் எங்களிடம் சூப்பர் எலைட் பினிஷ் ஜார்ஜட்டை திருப்பிக் கொடுத்து சாரிக்கு சாரியோ அல்லது பணத்தையோ திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் கிடைக்கும்

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

மொத்த விற்பனை இலாகா:
26, கெயிஸர் வீதி,
கொழும்பு-11.

சில்லறை விற்பனை இலாகா:
மெயின் வீதி,
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர்களுக்கு ஆதரவு

## இந்தியாவில் அரசாங்கமும் தனிப்பட்ட கழகங்களும் ஆற்றும் தொண்டு

## இலங்கையில் இன்னும் விடிவு ஏற்படவில்லை

## கலைக் கழகம் தமிழ்க் கலை வளர்ச்சிக்கு இதுவரை உருப்படியாகச் செய்தது என்ன?

'கலைஞர்களைப் போற்றும் நாட்டில்தான் கலைஞர்கள் தோன்றுவார்கள்' என்பது பாரதியார் மணிவாக்கு. இந்த நற்கருத்தின் நயமான உண்மையை இன்றைய சென்னை அரசாங்கம் தன்குணர்ந்து கலைஞர்களைப் போற்றி வளர்க்க நடவடிக்கை யெடுத்து வருகின்றதென்பதை எல்லாரும் நன்கு அறிவர். சேய்நாட்டுக் கலைஞர்களும் தமது உரிமையைப் பேணி உன்னத இலக்கிய சிருஷ்டிகளுக்குத் தக்க சன்மானம் பெற விழைந்திருப்பது வரவேற்கத்தக்கது. ஈழத்து எழுத்தாளர்கள் கனவு அரசாங்கத்தின் ஆதரவால் நனவாகி நற்பயன் பெறும் அறிகுறிகள் இன்று காணப்படுகின்றன.

### கலைஞர்களும் இன, மொழி வெறியும்

எழுத்தாளருக்கு ஆதரவு கொடுக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை யெடுக்குமென்று சமீபத்தில் கலாச்சார மந்திரி கூறினர். அதற்கான திட்டமும் விரைவில் அமுலுக்கு வருமென்று குறிப்பிட்டார். சிங்கள எழுத்தாளர் ஒருவரை இன்றைய அரசாங்கம் கௌரவித்து ஐயாயிரம் ரூபா சன்மானம் வழங்கியது. கலைஞர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். இன மொழி வெறியால் கிஞ்சித்தும் பாதிக்கப்படாது கலைஞர்கள் எம்மொழியைப் பேசி எழுதி வந்தாலும் அவர்கள் கலைஞர்கள் தாம் என்பதை அரசாங்கம் மதித்து ஆவன செய்யவேண்டியது அவசியமாகின்றது.

### யாழ்ப்பாணம் கலைக் கழகம்

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுள்ள கலைக்கழகம் அண்மையில் கூடி சில முக்கிய தீர்மானங்களைச் செய்தது. (1) கலை, அறிவியல், இலக்கியம் வரலாறு சம்பந்தமான நூல்களை இக்காலத்திற்கு ஏற்ற வகையில் வெளியிடுதல். (2) இத்தகைய புதிய நூல்களை ஆக்கியுள்ள ஆசிரியர்கள் அவைகளை வெளியிடும் வண்ணம் பணம் கொடுத்துதவுதல். இன்னும் இத்தகைய நூல்களை எழுதியுதவுமாறு ஊக்குவித்தல். (3) கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி, கலாநிதி எஸ். இராதாக் கிருஷ்ணன், கலாநிதி இரவீந்திரநாத் தாகூர் ஆகிய சிந்தனையாளர்களின் நூல்களை மொழிபெயர்த்தல். (4) ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடக்கூடிய மும்மாசச் சஞ்சிகையை வெளியிடுதல். (5) இப்போது பிரசுரிக்கப்படாது அருகியுள்ள நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும்கொண்ட ஒரு நூல் நிலையத்தை நிறுவி ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்த உதவுதல். (6) பணமுடைப்பட்டுள்ள கலா வல்லுநர்களுக்குப் பண உதவி செய்தல் (7) மகா வித்துவான் கணேசையர் அவர்களின் உரையுடன் கூடிய அகநானூறு நூலை அச்சேற்றுதல் (8) ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் தமிழ் - சமஸ்கிருத மொழிகளில் உயர்தர இலக்கியங்களைக் கற்பதற்கு ஒரு காவிய பாடசாலையை நிறுவுதல். இவைகள்தாம் அத்தீர்மானங்கள். பண்டிதர்களுக்கும் — பட்டதாரிகளுக்கும் ஏகபோக உரிமையுடையதாக இக்கலைக் கழகம் விளங்காது திறமையான எழுத்தாளர்களுக்கும் ஆதரவுடையதாக விளங்க வேண்டுவதவசியம்.

ஈழத்திலுள்ள எழுத்தாளர்களின் ஆற்புத சிருஷ்டிகளை வெளியிட்டுதவவும் இளம் எழுத்தாளர்களுக்குத் தக்க பயிற்சியளித்து

### புத்தொளி

சமுதாயத்தில் அவர்களை அறிஞராகத் திகழச் செய்யவும் இக்கலைக் கழகமும் அரசாங்கம் நிறுவியிருக்கும் கலைக் கழகமும் உழைக்க முன்வரவேண்டும்.

### தமிழ் வளர்ச்சிக் கழகம்

தென்கிழக்காசிய நாடுகளில்—விடுதலைபெற்ற நாடுகள் தம் தாய் மொழிகளையும் — கலைகளையும், பாரம்பரியங்களையும் வளர்ப்பதில் புத்தூக்கம் காண்பிக்கின்றன. சுதந்திரமடைந்த பாரதம் கலைகளை வளர்த்துக் காப்பதற்குப் பல கழகங்களை நிறுவியிருக்கின்றது. ஆங்கு சாகித்திய கழகம்—லலித கலைக் கழகம் போன்ற பல கலைக் கழகங்களை ஏற்படுத்தி ஆவன ஆற்றி வருகின்றது. தென்னிந்தியாவிலுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகம் போன்ற கழகங்கள் அரசாங்கத்தின் உதவியுடன் 'கலைக் களஞ்சியம்' போன்ற பெரும் நூல்களைத் தமிழில் வெளியிடுவதிலும் எழுத்தாளர்களின் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்குவிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றன.

### புலவர்களுக்கு பண்டைநாளில் ஆதரவு

சங்க இலக்கியச் செய்யுட்கள்மூலம் முத்தமிழ் வல்லுநர்கள் ஆதரவு பெற்று அகம் களித்திருக்கிறார்கள். பாட்டுக்கொரு பாட்டி ஒளவையாருக்கு அதியமான் என்ற அரசன் சிரஞ்சீவித் தன்மையைத் தரும் நெல்லிக்கனியைப் பரிசாகக் கொடுத்துத் தமிழ் வளர உதவியதை நாம் மறக்க முடியாது. வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர் சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடித் தம் பழைய கடனைத் தீர்த்திருக்கிறார். புலவர்களுக்கு வேண்டியவற்றை வாரிவாரி வழங்கிய பெருமக்கள் சரித்திரத்தைப் புறநானூற்றில் பார்க்கலாம்.

### அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும்

பண்டைக் காலத்தில் அரசர்கள், பாவலர்களையும், நாவலர்களையும் பாராட்டிப் பரிசில் வழங்கி வாழ்த்தியிருக்கிறார்கள் இன்று முடிசாய்ந்து — மன்னன் என்ற சொல் மக்களால் மறந்து போகும் சொல்லாக விளங்குகின்றது. முடியாட்சி முற்றுப்பெற்றது; குடியாட்சி மலர்ந்து மணம் வீசுகின்றது. நம் நாட்டில் அரண்மனை இல்லை; பாராளுமன்றம் இருக்கிறது. அரசன் இல்லை. அதிகாரத்தை நடாத்த மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அரசாங்கத்தினர் வாரி வழங்க முன்வராவிட்டாலும் ஓரளவிற்கு ஆதரவளிக்கவேண்டியது அவசியமாகின்றது.

### சாகித்திய அகாடமி

இந்தியாவில் எழுத்தாளர்களை ஆதரிக்கும் ஆர்வம் எங்கும் காணப்படுகிறது. அங்கு எத்தனையோ மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மொழிகள் பதினன்கு. இப்பதினன்கு மொழி வழி வரும் எழுத்தாளர்களுக்கு ஆதரவு தர வேண்டுமென்ற நோக்கத்தோடு உழைத்து வருகிறது. இதற்காக சாகித்திய அகாடாமி என்ற நிலையத்தை நிறுவியுள்ளது. பதினன்கு மொழிகளில் வெளிவரும் இலக்கியங்களிற் சிறந்தவற்றை ஏனைய இந்திய மொழிகளிலும் உலக மொழியாகிய ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடுவது அவர்கள் நோக்கங்களில் ஒன்ருகும்.

### 'தமிழின்ப'த்துக்கும் 'அலையோசை'க்கும் பரிசு

குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் தமிழ் இலக்கியத்தில் சிறந்த ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதனை ஆக்கிய ஆசிரியருக்கு ரூ. 5000 சன்மானம் கொடுத்தல் வேண்டுமென்பது இந்திய அரசாங்கத்தின் எண்ணக் கருத்தாகும். அதனைச் செயல்படுத்துவதற்கு துணையாக சாகித்திய அகாடமி பயன்படுகிறது. பாரதம் விடுதலையடைந்த 1947ம் ஆண்டிலிருந்து 1952க்குள்

(13-ம் பக்கம் பார்க்க)


ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை:

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,
நிர்.174, செட்டியார் தெரு, கொழும்பு-11



786

பீடி அன்பர்களுக்கோர் நல் அறிவிப்பு

"S. R. பீடி"

தேச பிரசித்திபெற்ற செய்யது பீடி கம்பெனியாரால் தயார் செய்யப்படுகிறது.

பாவிப்பாளர் போற்றத்தக்க சிறந்த உயர்தர அக்கூள் புகையிலையால் உருவாக்கப்பெற்று அன்பர்கள் நல் ஆசி பெற வந்திருக்கிறது.

கால தேச வர்த்தமானத்தை முன்னிட்டு குறைந்த விலையில் சிறந்த முறையில் உதயமாகி இருக்கிறது.

உண்மை விளங்க ஒருமுறை உபயோகித்துப் பார்க்க கேட்டுக்கொள்கிறேம்.

STOCKIST

S. Abdul Cader

254, Messenger Street, COLOMBO.



எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

போன்:- 281. தந்தி:- "ஜுவல்லர்ஸ்"

உத்தரவாதம் பெற்ற வைரங்கள்!

அழகு மிக்க தங்க ஆபரணங்கள் !!

யாவற்றிற்கும் சிறந்த இடம்

யாழ்ப்பாணம்

தங்கமாளிகை

★ தோற்றத்திலே கவர்ச்சி!
★ உழைப்பிலே புகழ்ச்சி!!
★ தரத்திலே உயர்ச்சி!!!

பெற்று விளங்குபவை

எல். கே. எஸ். நகைகளே.

நிகரற்ற அழகுற்ற எல். கே. எஸ். நகைகளையே என்றென்றும் அணியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN
1957 அக்டோபர் மாதம் 20-ந் திகதி
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# செனட் சபைத் தேர்தலில் சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதி

## திரும்பிய திருமலை

ஈழவள நாட்டில் மட்டுமல்ல, உலகத்திலேயே சிறப்பு மிக்க இயற்கைத் துறைமுகங்களில் ஒன்ருக விளங்கும் திருகோணமலையின் கடற்றளம் சற்றேறக்குறைய மூன்று நூற்ருண்டுக்காலம் அந்நிய ஆட்சியிலும், அதில் சுமார் ஒன்றரை நூற்ருண்டுக்காலம் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலும் சிக்குண்டிருந்து, இந்த வாரம் இலங்கை ஆட்சியாளரின் கைக்குத் திரும்பியிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை திருமலையின் துறைமுகத்திலே பிரிட்டிஷாரின் வெண் கொடி இறக்கப்பட்டு, இலங்கையின் சிங்கக் கொடி வானில் உயர்த்தப்பட்டபொழுது இலங்கையின் மக்கள் அனைவரும் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் என்ற வித்தியாசங்கள் எதுவுமின்றிக் குதூகலத்தினுல் குதித்திருக்க வேண்டும். அக்களிப்பினுல் அவர்களுடைய அகமும் முகமும் மலர்ந்திருக்க வேண்டும். அப்படி நடைபெறவில்லை!

திருமலைக் கடற்றளத்தில் சிங்கக் கொடி உயர்த்தப் பட்டதுகண்டுசிங்களமக்கள் இறும்பூதெய்தியிருக்கலாம். ஆனுல் தமிழ் பேசும் மக்கள் அந்தப் பெருமையிலும் மகிழ்ச்சியிலும் மனப்பூர்வமாகப் பங்குகொண்டிருக்க முடியாது. ஏன்?

அந்நிய ஆட்சியில் இலங்கை இருக்க வேண்டும் என்பதோ அன்றித் திருமலை தொடர்ந்து பிரிட்டிஷார் வசம் இருந்து வர வேண்டும் என்பதோ தமிழ் பேசும் மக்களுடைய ஆசையல்ல; விருப்பமுமல்ல அப்படி ஆசைப்படுவதற்கும் விருப்பந் தெரிவிப்பதற்கும் தமிழ் பேசும் மக்கள் அவ்வளவுதூரம் பிற்போக்குவாதிகள் அல்லர். வெளிநாட்டார் பிடியிலிருந்து நமது நாடு பரிபூரண விடுதலையடைய வேண்டும்; எந்தவகையிலும் அந்நியர் நம்மீது ஆதிக்கஞ் செலுத்த அனுமதிக்கக்கூடாது; இலங்கை சுத்த சுதந்திர ஜனநாயக நாடாக விளங்க வேண்டும்; அதில் தமிழ் பேசும் மக்களும் சுயாட்சி பெற்ற சுதந்திர மக்களாக வாழ வேண்டும் என்பதுதான் தமிழ் பேசும் மக்களுடைய கனவும் கருத்துமாகும்.

அப்படியானுல் திருமலை கைமாறும் சம்பவம் ஏன் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு முக்கிய சுபசம்பவமாகத் தோற்றவில்லை? இதற்கு தக்க காரணமுண்டு.

இதுகாறும் பிரிட்டிஷாரின் கையிலிருந்த திருமலைக் கடற்றளம் இப்போது இலங்கை அரசாங்கத்தின் கைக்குத் திரும்பியிருக்கிறது. ஆனுல் இன்றைய இலங்கை அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்குப் பங்கும் உரிமையும் உடைய ஒரு அரசாங்கமாக அமையவில்லை. தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஒருவர்கூட இன்றைய அரசாங்கத்தில் தகுதி வாய்ந்த ஒரு மந்திரியாய் அமர்ந்திருக்கவில்லை. இன்றைய இலங்கை அரசாங்கம் ஒரு பொது அரசாங்கமாய் அமையப் பெருமல் சிங்கள வகுப்புவாத அரசாங்கமாகவே அமைந்துள்ளது. தமிழ் பேசும் மக்களை அடிமைப்படுத்தும் அரசாங்கமாகவே அது தன் காரியங்களைப் பார்த்து வருகிறது. எனவே திருமலைத் தளம் கைமாறுவதானது, தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், ஒரு எஜமானிடமிருந்து இன்னெரு எஜமானின் கைக்கு மாறுவதாகவே கொள்ளப் பட வேண்டும். தமிழ் பேசும் மக்கள் களிப்படைவதற்கு இந்த நிகழ்ச்சியில் துளிகூட இடமில்லை. கவலைப்பட நிறைய இடமிருக்கிறது. பழைய எஜமான் பத்தாயிரம் பேருக்கு—பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களுக்கு—வேலை கொடுத்து அவர்களையும் அவர்தம் குடும்பங்களையும் காப்பாற்றி வந்தான். புதிய எஜமான் வெறும் வாய்ப்பேச்சு உறுதிமொழிகளுடன் எல்லோருக்கும் சீட்டுக் கிழிக்கப் போகிருன்!

திருமலைத் தளத்தின் கைமாற்றத்தினுல் மேலும் பல பிரச்னைகள் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கி எழப்போகின்றன. அவற்றை எப்படிச் சமாளிக்கப்போகிறேம்என்றபதில்தான் திருமலைஎதிர்காலத்தில் தமிழ்பேசும் மக்களுடைய பிரதேசமாக நீடித்து நிலைக்கப்போகிறதா அன்றி சிங்களப் பிரதேசமாக மாறப்போகிறதா என்பது பெரிதும் தங்கியிருக்கிறது.

முக்கிய பிரச்னை திருமலையில் வேலை இழக்கும் சுமார் பத்தாயிரம் தமிழ் பேசும் மக்களுக்கும் திருமலைப் பகுதிகளிலேயே வேலை தேடிக்கொடுப்பது. அங்கு அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்ருல் அவர்கள் திருமலையை விட்டு வெளியேறிவிடுவர். அவர்களும் வெளியேறி, அரசாங்கத்தின் சிங்களப் படை பட்டாளங்களும் திருமலையில் குடி புகுந்து, பதவியாவும் சிங்கள மக்களால் நிறைக்கப்பட்டால் தமிழ் வாக்காளர் அங்கு சிறுபான்மையினராய் விடுவர். இதன் காரணமாக அடுத்த முறைப் பாராளுமன்றத் தேர்தலில் திருமலைப் பிரதிநிதியாக ஒரு சிங்களவர் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இது மிகவும் பயங்கரமான ஒரு நிலைமையாகும்.

எனவே திருமலையைப் பாதுகாக்க வேண்டுமானுல் மூன்று காரியங்களைத் திட்டமிட்டு உடனடியாகச் செய்ய வேண்டியது தமிழ் பேசும் மக்கள் தலைவர்களின் கடமையாகும்; தமிழர் தம் அரசியல் கட்சிகளின் கடமையாகும்.

1. திருமலையில் வேலை இழக்கும் தமிழ் மக்கள் திருமலையைவிட்டு வெளியேறிவிடாதபடி தடுத்து நிறுத்தி அவர்களுக்கு வேறு தொழில் துறைகள் பார்க்க வசதியேற்படுத்திக்கொடுக்க வேண்டும். அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு நிலம் பெற்றுக்கொடுத்து அவர்களை விவசாயத்தில் ஈடுபடும்படி தூண்ட வேண்டும். நிலத்தை அரசாங்கம் கொடுக்க மறுத்தால் வேண்டிய நிலத்தை நாமே பெற்றுக் கொள்ள இயக்கங்கள் நடத்த வேண்டும்.

2. பதவியாக்குளத் திட்டத்தின்கீழ் திருகோணமலைப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கவே கூடாது.

3. சிங்களப் படை பட்டாளங்கள் திருகோணமலையில் முகாமிடுவதை ஆட்சேபித்துத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இந்த மூன்று காரியங்களையும் செய்யாவிட்டால் திருகோணமலையைத் தமிழ் பேசும் மக்கள் இழக்க வேண்டிய நிலைதான் ஏற்படும் என்று அஞ்சுகிறேம்.

## பணம்!........

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யெடுத்தன. முதலில் போன இரண்டொரு தாள்களை ஏற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து கேள்வித்தாள்கள் போனபோது கூட்டத்தைக் காத்து நின்ற "சிப்பாய்கள்" தடுத்து நிறுத்தித் திருப்பிவிட்டனர்.

### 'பேசாதே'— அருளம்பலத்துக்கு தடை

கொக்குவில் கிராமச் சங்கத் தலைவர் திரு அருளம்பலம் என்பவர் பேச ஆரம்பித்தார். "சமஷ்டிக் கட்சியினர் தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்துவிட்டனர். உடன்படிக்கையின்மூலம் சிங்களத்தை அரசாங்க பாஷையாக ஏற்றுக்கொண்டனர். மூர்க்கரையும் முதலைகளையும்கொண்ட கட்சி தமிழரசுக் கட்சி" இப்படியாக அவர் பேசும்பொழுது "பேசாதே நிறுத்து, தமிழரசுக் கட்சியைத் தாக்க வேண்டிய அவசியமில்லை. உன்னிடம் ஏதாவது புதிய சரக்கு இருந்தால் அதைச் சொல்லு" என்று மக்கள் கூச்சலிட்டனர். அவ்வளவுதான் திரு அருளம்பலம் பேச்சை முடித்துக்கொண்டார்.

பின்னர் திரு அந்தோனிப்பிள்ளை என்பவர் பேசினுர். திரு பொன்னம்பலத்தை சிலர் கேள்விகள் கேட்கிருர்கள். அவற்றிற்கு நானே பதில் சொல்லப்போகிறேன் என்று ஆரம்பித்தார்.

### ஆள் சேர்த்த கார் நொறுங்கிய செய்தி

இப்படி இவர் பேசிக்கொண்டிருக்கையில் திரு பொன்னம்பலத்திற்கு ஆள் சேர்த்த கார் ஒன்று நொறுக்கப்பட்டதாக ஒரு செய்தி அங்கு அடிபடலாயிற்று. அதாவது திரு க. பொன்னுத்துரை என்பவரின் ஸி. எஸ். 1272 இலக்கக் கார் ஒன்று ஆனைப்பந்தியிலிருந்து திரு பொன்னம்பலத்தின் கையாட்களை அடிக்கடி ஏற்றிப் பறித்துக்கொண்டிருந்தது. இரவு எட்டு மணியளவில் ஒரு பயணம் வந்துகொண்டிருக்கையில் கூட்டம் நடந்த இடத்திற்கு கால் மைல் தூரத்துக்கப்பால் வைத்து அக்கார் மீது கல் எறியப்பட்டதாகவும் அதனுல் கண்ணுடிகள் உடைந்து அக்காருக்கு பழுது ஏற்பட்டதாகவும் பேசிக்கொள்ளப்பட்டது.

"கவலைப்படாதே திரு பொன்னம்பலத்திடமிருந்து காருக்கு நஷ்டஈடு வாங்கித் தருவேன்" என்று கார் சொந்தக்காரருக்கு திரு திருநாவுக்கரசு ஆசிரியர் என்பார் ஆறுதல் கூறினுராம்.

### கூட்டம் குழப்பும் வித்தைக்கு குரு ஜீ. ஜீ.

திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசுகையில் சமரஸ உடன்படிக்கையைக் கிழித்தெறியும்படி சமஷ்டிக் கட்சியினரை நிர்ப்பந்திக்க வேண்டியது பொதுமக்கள் கடமை என்ருர். அத்தோடு கூட்டம் குழப்புபவர்களையும், நடைபெருமல் செய்பவர்களையும் பலமாகக் கண்டித்தார். அப்போது "இந்தக் கூட்டம் குழப்பும் வித்தைக்கே குரு திரு பொன்னம்பலந்தானே. கொழும்பில் 1947ல் இவர் தேசிய தமிழர் சபைக் கூட்டத்தைக் குழப்பியடித்து மேடையைக் கைப்பற்றியதையும், 1948ல் தமிழரசுக் கட்சி [illegible] …டேகத் தேர்தலில் கூட்டத்தைக் கல்லெறிந்து, பறைமேளம் அடித்துக் குழப்பியதையும் இவர் மறந்துவிட்டாரா? யானைக்கு ஒரு காலம் இருந்தால் பூனைக்கும் ஒருகாலம் வரத்தானே செய்யும்? வினை விதைத்தவன் தினை அறுக்க முடியுமா?" என்றெல்லாம் பொதுமக்கள் பேசிக்கொண்டனர்.

### பணம் பங்கு வைப்பதில் பிணக்கும் புழுக்கமும்

கூட்டம் முடிந்தது. மறுநாள், கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த ஆசிரியர்களுக்கிடையில் பிளவு ஏற்பட்டுவிட்டதாகப் பேசிக்கொள்ளப்படுகிறது. கூட்டம் ஒழுங்கு செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட ரூ. 500ல் ரூ. 220 மிகுதியிருப்பதாகவும் அத்தொகையை ஐந்து ஆசிரியர்கள் பங்குபோடுவதில் பிணக்கும் பிரிவும் ஏற்பட்டதாகவும் வதந்தி. கடைசியில் ஒரு ஆசிரியரே அத்தொகையைக் கைப்பற்றிக்கொண்டாராம்! இதரர்கள் புழுங்கிக்கொண்டிருக்கிருர்கள் என்றும் திரு பொன்னம்பலம் இன்னெரு கூட்டம் இங்கு வைத்தால் 'முதற் கல்லை' விட்டெறிபவர்கள் இவர்களாகவே இருப்பார்கள் என்றும் விஷயமறிந்தவர்கள் கூறுகிருர்கள்.

## தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு. நல்லையா நியமனம்

### தேர்தல் வாக்குறுதி காப்பாற்றப்படுகிறது

"தீண்டாமையை ஒழிக்க வேண்டும், உயர்வு தாழ்வைப் போக்க வேண்டும், ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு—அதாவது ஹரிஜனங்களுக்கு—அரசியல் உரிமை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற விஷயங்களில் தமிழ் மக்களிடையேயுள்ள வேறு எந்த அரசியல் கட்சியையும் விடத் தமிழரசுக்கட்சி முன்னணியில் நின்று மிகத் துணிகரமாக உழைத்து வருகிறது. இப்போது அது மேற்கொண்டிருக்கும் பணியில் வெற்றியீட்டினுல் செனட் சபைக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்திலுள்ள ஒரு பிரதி நிதியை முதன் முறையாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய பெருமையும் தமிழரசுக் கட்சியையே சார்ந்ததாகும்" என்று தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினுர்.

தீண்டாமையைப் போக்குவதற்கு அரசாங்கம் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற பிரேரணையைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திருகோணமலைப் பிரதிநிதி திரு. என். ஆர். இராஜவரோதயம் தான் என்றும் அதைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் பல இந்துக் கோயில்கள் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பட்டன வென்றும் அவர் மேலும் கூறினுர்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமோ அன்றிக் கொம்யூனிஸ்ட் தலைவர் திரு. பி. கந்தையாவோ துணிந்து நடத்த முடியாத சமபந்தி போஜனத்தைப் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு அதில் பங்கு பற்றிய சமரஸ வாதிகள் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தாம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

செனட் சபையில் காலியாகும் பத்து ஸ்தானங்களும் இவ்வாரம் பூர்த்தி செய்யப்படும் போது தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு அவற்றில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றுக் கொடுக்க தமிழரசுக் கட்சியினர் பெரிதும் பாடுபட்டு வருகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு ஸ்தானத்தை செனட்டில் பெற்றுத் தர முயற்சிப்போம் என்று கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழரசுக் கட்சியினர் பகிரங்கமாக வாக்குறுதியளித்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இதன் பிரகாரம் அவர்கள் திரு. ஜீ. நல்லையா என்பவரைத் தங்கள் சார்பில் செனட்டர் தேர்தலுக்கு நிறுத்துவதென முடிவு செய்துள்ளனர் என்று தெரிகிறது. திரு. நல்லையா யாழ்ப்பாண நகர சபையின் உறுப்பினரும், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைப் பிரமுகரும், தமிழரசுக் கட்சியின் நிர்வாக சபை அங்கத்தினருமாவர்.

## 'டுப்பிளிக்கேட்' ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டேன். அங்கு மகனுக்குச் சமய பாடம் படிப்பித்துகொண்டிருந்தார் தந்தை.

தந்தை:-"உலகைப் படைத்தது யார்?"

பையன்:-"ஆண்டவன்"

தந்தை:-சூரியனைப்படைத்தது...?

பையன்:- "கடவுள்தான்"

தந்தை:-'கெட்டிக்காரன்; சந்திரனைப் படைத்தது...!

பையன்;-"ருஷ்யாக்காரன்......"

பையனின் பதிலை சமாளிக்க முடியாமல் தந்தை திணறி நின்ற காட்சியைப் பார்த்தபோது இந்த செயத்கைச் சந்திரனை வைத்துக்கொண்டு ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையே எழுதிவிடலாம்போல் தோன்றியது. என்ன! ஆராய்ச்சிக் கட்டுரை என்ரு சொன்னேன்? 'ஔவையார் ஒன்ரு. இரண்டா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் இனி இரண்டு ஔவையார்கள் என்று நிச்சயமாகத் தீர்மானித்துவிட வேண்டியதுதான். இரண்டு சந்திரலகளிலும் இரண்டு ஔவைப் பாட்டிகள் தானே அப்பம் சுடுவார்கள்...!

காகங்கள் கரைந்தன... கோழிகள் கூவின...அப்போதுதான் பொழுது புலர்ந்து விட்டதென்று தெரியவந்தது. இரவு முழுவதும் 'டுப்பிளிக்கேட்' சந்திரனுேடல்லவா ஓடி அலுத்து விட்டேன்...கல்லூரியில் இன்று முழுக்க தூங்க வேணடும் போலிருக்கிறதே என்ற எண்ணத்தோடு வீட்டை அடைந்தேன். "அண்ணு! இன்று பூரண லீவு" என்று கூறிக்கொண்டே என்முன் நின்ருன் தம்பி சந்திரன். இனிமேல் ஒவ்வோர் மாதமும் எத்தனையோ லீவு நாட்கள் வரும்என்பதை நினைத்த போது எனக்குப் பரம திருப்தி;

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விடுமுறைத் தினங்களில் அரசாங்கம் கைவைப்பதற்கு பலமான எதிர்ப்பு!

## கல்பிட்டி மீலாத் ஷரீப் கூட்டத்தில் தீர்மானம்

**"முஸ்லிம் பெருமக்களுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த தினமும், ரம்ழான், ஹஜ், புது வருடத் தினம் ஆகிய நான்கும் மிகப் புனிதமானவை. இவற்றை ஆங்கில ஆட்சியிலும், யு. என். பி. அரசாங்கத்திலும் இஸ்லாமியப் பெரு மக்கள் விடுமுறையாக அனுபவித்து வந்தார்கள். தற்போதைய எம். ஈ. பி. அரசாங்கம் இவ் விடுமுறைத் தினங்களில் தலையிட்டு புது வருடத் தினத்தையும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த தினத்தையும் விடு முறைப் பட்டியலிலிருந்து நீக்கிவிடத் தீர்மானித்திருப்பதை கல்பிட்டி மீலாத் ஷரீப் கமிட்டியார் இப்பொதுக் கூட்டம் மூலமாகப் பலமாக எதிர்ப்பதுடன் முஸ்லிம் விடுமுறைத் தினங்களில் ஒரு தினத்தையாவது நீக்கக்கூடாதெனவும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறார்கள்''**

கடந்த வெள்ளிக்கிழமை கல்பிட்டி சின்னக் குடியிருப்பு கடைத்தெரு முற்ற வெளி மைதானத்தில் கல்பிட்டி மீலாத் ஷரீப் கமிட்டியாரின் ஆதரவில் வெகு விமரிசையாக நடைபெற்ற நபிகள் நாயகம் பிறந்த தினக் கொண்டாட்டத்தின் போது மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு உள்நாட்டு அமைச்சருக்கும், கலாச்சார அமைச்சருக்கும் அனுப்பிவைக்கப் பட்டது.

அன்பு மார்க்க சங்கத் தலைவர் ஆலி ஜனுப் முஹம்மது அலிஹுஸைன் அன்பர் பூபதிதாசர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கொண்டாட்டத்தில் அல்ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன் மேற்படி தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசினார். மீலாத் ஷரீப் கமிட்டிச் செயலாளர் அநுவதித்தார்.

அன்பர் பூபதிதாஸர் தமது தலைமை யுரையில் கூறியதாவது:

''இன்றைய உலகம் வெறும் போலித்தனத்தில் மண்டிக்கிடக்கிறது. இளைஞர் சிகரட் புகைப்பதும், பெண்கள் உதட்டிற்குச் சாயம் தடவுவதும் தான் வாழ்க்கை என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்த மனோமயக்குத் தீர்ந்து உண்மையான வாழ்க்கையை—ஆத்மீக வாழ்க்கையை—உணர மனித சமூகம் தவறுமேயானால் இந்த உலகிற்கு உய்வே கிடையாது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மூலமாக ஆண்டவன் வெளியிட்ட திருக் குர்ஆன் வாக்கியங்களின் படி மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட வேண்டும்.

''நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உலகத்திற்கு ஏகத்துவக் கொள்கையை எடுத்தோதினார். சின்னங்களை வணங்க வேண்டாம் என்றார். ஆனால் இன்று பள்ளிவாசல்களுக்குள் பிறை அடையாளமும் நட்சத்திர அடையாளமும் எப்படியோ புகுந்துகொண்டன. இவற்றின் முன்னால் நின்று வணங்கும் முஸ்லிம்களைப் பார்த்து பிற சமயத்தினர்கள் ''இவர்கள் என்ன பிறையை வணங்குகிறார்களே!'' என்று கேலி செய்கிறார்கள். பாரதியார் கூட விஷயமறியாதவராக ''திக்கை வணங்கிடும் துலுக்கர்'' என்று பாடுவதற்கு இன்றைய முஸ்லிம்கள் தவறுதலாக அனுஷ்டிக்கும் சில மௌடீகங்களே காரணமாய் அமைந்தன. இந்த அறியாமை அகல வேண்டும்''—இப்படி அன்பர் பூபதிதாஸர் பேசினார்.

அவரைத் தொடர்ந்து ஆலி ஜனுப், மௌலானா, மௌலவி, ஹாபிஸ் எம். ஸி. அபுல்ஹஸன்தா ஆலிம்சாகிப் ஆலிஜனுப் எம். எம், ஷாஹுல் ஹமீது ஆலிம் சாஹிப், சுதந்திரன் ஆசிரியர் திரு எஸ். டி. சிவநாயகம் ஆகியோரும் பேசினர்.

## பூமியின்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

(P, S அலைகள் என் உள் புகுந்து வெளிவரும்போது நேரான பாதையில் வருவதில்லை. வளைந்தே (Concave) வருகின்றன. இதன் காரணம் பிரதிபலித்தலும் (reflection) ஊடுருவிச் செல்லுதலும் (refraction) ஆகிய பாறைகளின் வேலைகள். அவை (பாறைகள்) அதிக அடர்த்தியாக இருப்பதால் அதிகரிப்பதாலேயாகும்.

நில நடுக்கத்தின் மூலம் அறியக்கூடியவையாவன:

### அலைகளின் வேகம்

(i) அலைகளின் வேகம் (P, S அலைகள்) அவை உள்ளே செல்லச் செல்ல அதிகமாகிறது. அதிவேகமாகச் செல்லும் அலைகள் அதி விரைவில் வெளி வருகின்றன. இதன்மூலம் உட்பகுதியில் இருக்கும் பாறைகள் அதிக அடர்த்தி உள்ளவை என்று புலப்படுகிறது.

### வெளிப் பகுதி

(ii) L அலைகள் என் உட்பகுதிவரை செல்வதில்லை. குறிப்பிட்ட தூரம் மட்டுமே உள்ளே செல்கின்றன. இதன்மூலம் L அலைகள் பிரயாணம் செய்யும் மேற்பகுதி உட்பகுதியைவிட மாறுனது என்பதும், உட்பகுதிப் பாறைகள் வெளிப்பகுதிப் பாறைகளை விட அதிக அடர்த்தியாக இருப்பதால் L அலைகளை உள்ளே விடுவதில்லை என்பதும் புலப்படுகிறது. இந்த வேறுபட்ட பகுதிக்கு வெளிப் பகுதி (Crust) என்று பெயர்.

(தொடரும்)

## தபால்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகப் பிடிபட்டுத் தண்டிக்கப் பட்டிருக்கும் செய்திகள் பொது மக்களின் நினைவை விட்டு அகலாதிருக்கும் போது தபால் பட்டுவாடா செய்யும் தபால் ஆபீஸ் சிப்பந்திகளின் ஒழுங்கற்ற செய்கை அவர்களுக்கு எதுவிதத்திலும் நம்பிக்கையளிக்க மாட்டாது.

### தபால் சேவை கேடு கெட்டு விட்டது

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில்இலங்கையில் அற்புத சேவையாக விளங்கிப் பெரும்பாலாரின் பாராட்டைப் பெற்றது தபால் சேவை. பின்னர் யு. என். பி. ஆட்சிக்காலத்திலும் அது பரவாயில்லை என்று சொல்லக் கூடிய நிலையில் இருந்தது. தற்போது எம். ஈ. பி. ஆட்சியில் அது கேடு கெட்டு விட்டது என்று பலரும் கதறிக் குறை கூறுமளவுக்குத் தாழ்ந்து விட்டது என்ற கருத்து எங்கும் [illegible] அடிபடுகிறது.

## விவேகானந்த சபை பேச்சுப் போட்டி

கொழும்பு விவேகானந்த சபை வாலிபர் இயக்க ஆதரவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலையில் மாணவ மாணவியருக்கு ஒரு பேச்சுப் போட்டி நடைபெற்றது. முதலில் சபைத்தலைவர் திரு. எஸ். சிவசுப்பிரமணியமும் பின்னர் வாலிப இயக்கத் தலைவர் திரு. கே. சபாநாயகமும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

பேச்சுப் போட்டிக்கு நடுவர்களாக சுதந்திரன் ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகம், வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத் தலைவி செல்வி காசிப்பிள்ளை, பாத்திமா பாடசாலை உப தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் கடமையாற்றினர்.

செல்வி சா. நாகேஸ்வரி, செல்வன் கா. சண்முகம், செல்வி பி. எஸ். இலட்சுமி, செல்வன் இ. அப்துல் சமது ஆகியோர் பரிசுகள் பெற்றனர். செல்வி காசிப்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.


## ஆங்கிலம்
## ENGLISH

தொழில்களில் உயர்வு பெற ஆங்கிலம் என்றும் உதவும். ஆறு மாதங்களில் எழுத - வாசிக்க - பேச விரும்பினால் A. B C. தொடங்கி B. A. வரை கற்பிக்கும் அற்லஸ் ஹோலில் சேருங்கள்.

இலவச விபரங்களுக்கு:

**அற்லஸ்ஹோல்,**
கொழும்பு.
த.பெ. 649 போன்: 9759.



எங்கள் பொலிஸிதாரர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எங்கள்

## தீபாவளி வாழ்த்துக்கள்

உரித்தாகுக!

உங்கள் சீவியங்களை உடனே இன்சூரன்ஸ் செய்து கொள்ளுங்கள்.

பதுளை, கண்டி, மாத்தளை, பொத்துவில், ஊர்காவற்றுறை முதலிய இடங்களில் உத்தியோகஸ்தர்கள் தேவை. நல்ல ஊதியம் வழங்கப்படும்.

ஏ. நடராசா — பரிபாலன டிரெக்டர்.
க. சிற்றம்பலம் — மானேஜிங் டிரெக்டர்.

**THE NORTHERN LIFE & GENERAL INSURANCE CO., LTD.**

FIRST FLOOR,
18 1/6, STATE BANK BUILDING,
COLOMBO-1.

Telephone: 7397. P. O. Box: 807.



எங்கள் வழமைக்காரர்கள், வியாபாரிகள் எல்லோருக்கும் எங்களது

## தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

இந்நன்நாளில் உங்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய எங்களை ஆலோசியுங்கள்.

- 'ஜுபிலி' கேபிள் & கம்பிகள்
- 'ரெஸ்லா' & 'மெற்றம்' எலக்டிரிக் பல்புகள்
- 'சானியோ' ரேடியோ பெட்டிகள்
- 'முதலை' மார்க் பேப்பர்
- 'சக்குற' ரூள் பிலிம்
- 'றைக்கோ fபிளாக்ஸ்' கெமரா
- 'காஸில்' பூட்டுகள்
- 'எனி' கத்திச் சாமான்கள்
- 'போனிக்ஸ்' & 'ஓறியன்ற்' விசிறிகள்
- 'கே. டி. கே.' விசிறிகள்

**துரை அருள் & கோ.,**
லிமிட்டெட்,
93, கெய்ஸர் வீதி, கொழும்பு-11.
போன்: 4568.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# யார் குற்றவாளி?

— ந. கிருஷ்ணசிங்கம்

நள்ளிரவு! மணி இரண்டு! முன்வீட்டு முத்தம்மா அழுதுகொண்டிருந்த குழந்தையைத் தேற்றுவதற்காக அரைத் தூக்கத்துடன் 'ஆராரோ ஆரிரரோ' பாடிக்கொண்டிருந்தாள். நாய்களின் 'ளொள்...ளொள்' என்ற சப்தமும் தவளைகளின் 'கீச்சுக்கீச்' சென்ற ஒலியும் தூறிக் கொண்டிருந்த மழையின் மெல்லிரைச்சலும், கப்பிக்கிடந்த காரிருளும்சேர்ந்து பயங்கர உருவெடுத்து ஆடிக்கொண்டிருந்தன.

ஆனந்தன் படுக்கையில் நிலை கொள்ளாது புரண்டான். அவனது உடல் மிகக் கேவலமாக வற்றியுலர்ந்து கிடந்தது. இலேசான இருமல் வழக்கம்போல் தலை நீட்டியது. அது இம்முறையும் இரத்தத்தை வாரியிறைக்கத் தவறவில்லை. அவனது இதழ் ஓரத்திலே சிரிப்பு அரும்பியது. "காலதேவனின் விளையாட்டு நம்மிடம் நெருங்கிவிட்டது" என்று அவன் வாய் முணுமுணுத்தது.

தேய்பிறைச் சந்திரன் வானத்திலே தோன்றினன்; மங்கலான நிலா வொளியிலே, மரங்களடர்ந்த அந்தப் பயங்கரச் சாலையோரமாக ஆனந்தன் தள்ளாடித் தள்ளாடிச் சென்றுகொண்டிருந்தான். அவனைக் கண்டு வயற்காட்டுக் கழுதைகள் 'யோ...யோ' என்று கத்தின, நாய்கள் குரைத்தன. ஆனல் அவன் அவற்றையெல்லாம் சட்டை செய்யாது நடந்து கொண்டேயிருந்தான்.

பட்டணத்து ரஸ்தாவுடன் கிராமத்துத் தெரு சேரும் சந்தியிலே ஆனந்தன் நின்ருன். அவனது கைகள் மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டன. இருமல் தொடங்கியது. அரை மணித்தியாலம் தொடர்ந்து இருமினன். ஆம், இடைவிடாது இருமினன். அதன் பலன் ஒருவாய் இரத்தம்!

★

ஆனந்தன், ஆனந்தமாய்த்தான் வாழ்ந்தவன். ஒரு காலத்திலே நினைவிலும் நித்திரையிலும் இன்பக் கனவுகள் கண்டு மகிழ்ந்தவன் தான் அவன்.

ஆனல் இன்று அவன் கனவெல்லாம் பாழாகிவிட்டது. ஆசையெல்லாம் நிராசையாகிவிட்டது. ஆளேநடைப் பிணமாகிவிட்டான்.

காரணம்.........?

★

மரகதத்தின் சடலம் சிதையிலே கிடத்தப்பட்டு, திகுதிகுவென்று எரிந்து ஜோதியோடு ஜோதியாகக் கலந்து நாலைந்து நாட்கள் ஆகிவிட்டன.

பதினைந்து வயதிற் கிடையில், பெற்ற தாயையும் பேணி வளர்த்த தந்தையையும் இழந்து காம்பறுத்த முல்லை போன்று தேம்பி அழுதுகொண்டிருந்த ஆனந்தனை அழைத்துக்கொண்டு கிராமத்துக்கு வந்தார் சின்னையா.

செம்பாட்டு மண்ணிலே பாடுபட்டால்தான் செம்மையான வாழ்வு வாழலாமென்ற கொள்கையுடையவர்கள் வாழும் பகுதி பண்ணையூர். அவர்களில் ஒருவர் தான் சின்னையா. நெட்டையான மெலிந்த உடல், குழி விழுந்து ஒளி மங்கிய கண்கள், நரையோடிய கொட்டைப்பாக்குக் குடுமி, பளுப்பேறிய நாலுமுள வேட்டி, அதற்கேற்ற மேற்துண்டு. இதுதான் அவரது உருவம். காலையிலே மண்வெட்டி தூக்கி மாலையிலே வீடு திரும்பும் அந்த மனிதனுக்கு மகிழ்ச்சியளித்த பொருள் ஒன்றேயொன்றுஅதுவேறென்றுமில்லை, பத்து வயது நிரம்பிய அவரது மகள் தான். தாயை இழந்த அவள் மீது அவருக்கு அளவற்ற பாசம். 'கமலா கமலா' என்று அவர் அடிக்கடி அவளை அழைத்துக்கொண்டேயிருப்பார். மகளின் பெயரை உச்சரிப்பதில் அந்தப் பெரியவருக்கு அத்தனை பெருமையும், பூரிப்பும்!

காலஞ்சென்ற மரகதம் அவரது ஒரே தங்கை. அவளைப் பட்டணத்திலே தான் கட்டிக் கொடுத்தார். போதாத காலம் இளம் வயதிலேயே காலன் அவளது தாலியைப் பறித்து விட்டான். கடைசியில் அவளையும் அழைத்துக் கொண்டான். எனவே ஆனந்தனை ஆதரிக்க அவரைத் தவிர வேறு யாருமில்லை.

விதி தனது வேலையைத் தொடர்ந்தது. சின்னையா வீட்டிலும் அது விளையாடத் தொடங்கிற்று. பாரிசவாதத்தினற் பீடிக்கப்பட்ட சின்னையா படுத்த படுக்கையாகி விட்டார். களிப்புக் கொஞ்சிய இடத்திலே கவலை புகுந்தது. நோயின் கொடுமை தாங்காது 'ஐயோ ஐயோ' என்று கத்தினர் சின்னையா. பசியின் கொடுமை தாங்காது 'அத்தான் அத்தான்' என்று கதறினள் கமலா. இவற்றையெல்லாம் பொறுக்க முடியாது கண்ணீர் சிந்தினன் ஆனந்தன்.

இந்தச் சூழ்நிலையிலேதான் ஊரிலே பட்டாளத்திற்கு ஆட்கள் திரட்டுகிருர்கள் என்ற செய்தி அவனது காதைத் துளைத்தது. கிராம விதானையின் உதவியினல் ஆனந்தன் பட்டாளத்திலே சேர்ந்தான்.

அன்று முதற் திகதி! இருள் மூடிக் கிடந்த அவர்களின் வாழ்விலே ஒளி தோன்றிய தினம்! மரணத்துடன் போராடிய உள்ளங்களிலே மலர்ச்சி தோன்றிய நாளது!

'தபால்' என்ற போஸ்ட்மேனின் குரல் கேட்டதும் கமலா துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவந்தாள். மகிழ்ச்சிப் பெருக்குடன் தபாலைப் பெற்றுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். மறுகணம் 'அப்பா! அப்பா!' என்று உரக்கக் கத்திக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தாள். பாரிசவாதத்தினல் பாயுடன் ஒட்டிப் போய்க் கிடந்த சின்னையாவை புதிய தெம்பு தூக்கி இருத்தியது.

"அப்பா! அத்தான் நாற்பது ரூபா அனுப்பியிருக்கிருர்" என்று குதூகலத்துடன் கூறினள். அவளின் நயனங்களில் நன்றி உணர்ச்சி பொங்கி வழிந்தது. அவரின் கண்கள் மகிழ்ச்சிப் பெருக்கினல் நீர் வீழ்ச்சியாகின. வாய் ஏதோ கூற முயன்றது. ஆனல் சப்தமெழவில்லை.

தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் ஆனந்தன் நாற்பது ஐம்பது என்று பணமனுப்பிக்கொண்டே இருந்தான். காலம் புரண்டது. கமலா கன்னியானள். செய்தி அறிந்து சிந்தை குளிர்ந்தான் ஆனந்தன்.

அப்பப்பா மூன்று வருடம் எவ்வளவு மாற்றங்களை உண்டாக்கி விட்டது. ஆனந்தன் வீட்டுக்கு வந்தான் உலர்ந்த உடலும் ஒட்டிய வயிறுமாகச் சென்ற ஆனந்தனு இவன்!

நல்ல உயரம், கட்டுள்ள சிவந்த தேகம், மாசற்ற முகம் அதிலே அரும்புமீசை, ஒளி படைத்த அழகிய விழிகள், நேரான நீண்ட நாசி, கமலாவின் இரு விழிகளும் கதவு இடுக்கு வழியாக அவனது அழகை அள்ளி அள்ளிப் பருகின. அவளது இதயத் தந்தியில் மெல்லிய கீதமொன்று தவழ்ந்தது.

மூன்று வருடத்திற்குப் பிறகு ஆனந்தனைக் கண்ட ஆனந்தத்தினல் சின்னையா அவனைக் கட்டித் தழுவிக் கண்ணீர்விட்டார்.

"எங்களை வாழ்விக்கவந்த தெய்வமடா நீ!" என்று நன்றிப் பெருக்கினல் நாத் தழுதழுக்கக் கூறிக்கொண்டார். அவரது அன்பு அணைப்பிலிருந்து விடுபட்ட ஆனந்தன் ஆச்சரியத்தினல் விழித்தான்.

மஞ்சள் பாவாடை, அதற்கேற்ற மெல்லிய நீலத் தாவணி, கருநாகம்போன்ற நீண்ட பின்னல், அதிலே மணம் வீசும் மல்லிகை. தங்கச் சிலை போன்று பூத்துக் குலுங்கும் யௌவனத்தின் பொலிவுடன் அச்சமும் ஆவலும் வதனத்திலே செம்மை கூட்ட வெட்கத்தினல் குனிந்த தலை நிமிராது வெள்ளி டம்ளரில் காப்பியுடன் வந்தாள் கமலா. "இத்தனை அழகியா என் கமலா!" என்று வியந்து கொண்டது அவனது உள்ளம்.

அன்று மாலை. சின்னையா சாய்வு நாற்காலியிலே படுத்திருந்தார். ஆனந்தன் அவருக்குப் பக்கத்தில் இருந்த கட்டிலில் அமர்ந்தான். அவர் ஊர் புதினங்களையும் அடுத்த வீட்டு அயல் வீட்டு பிரச்னைகளையும் அவனுக்கு எடுத்துக் கூறத் தொடங்கினர். அவரது பேச்சு இறுதியில் உள்வீட்டுப் பிரச்னையில் வந்து நின்றது:

"ஆனந்த். எனக்கோ வயது போய்விட்டது. அத்தோடு நோய் நொடியும் பிடிச்சிட்டது. கமலாவைக் கட்டிக்காக்க இனி என்னல் முடியாது. அடுத்த பயணத்தோடு வந்து அவளின் கழுத்திலே முடிச்சுப் போட்டிட்டியானல் அங்காலே இந்தக் கிழவன் நிம்மதியாய்க் கண்ணை மூடிவிடுவேன்."

அவரின் குரலிலே ஆவல் தொனித்தது. வெற்றிலைத் தட்டுடன் வந்த கமலாவின் கன்னங்கள் தந்தையின் பேச்சைக் கேட்டுக் குங்குமமாகச் சிவந்தன. கடைக் கண்ணினல் அவனை நோக்கினள் அந்தக் கள்ளி. கண்களைச் சிமிட்டினன் அந்தக் கள்ளனும்.

சிறிது நாட்கள் கழிந்து கொழும்பு திரும்பிய ஆனந்தனுக்கு வேலையே ஓடவில்லை. கண்களிலே கமலாவின் நிழலாட்டம். கருத்திலே அவளின் விளையாட்டு. புரியாத வேதனை அவனைப் பிடித்துத் தின்றது. பாவம் அவனைக் காதல் வியாதி பிடித்துவிட்டது. மாதங்கள் எட்டு மறைந்தன. அப்பொழுதுதான் அவனது வாழ்க்கையையே பாழாக்கிய அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

கிராமத்திலே வசிக்கும் அவனது நண்பன் நாகராஜனிடமிருந்து சிந்தை குலுங்கும் செய்தி ஏந்தி வந்தது ஒரு கடிதம். 'பக்கத்து வீட்டிலே குடியேறிய சிங்கப்பூர்க்காரனுடன் கமலா ஓடி ......விட்டாள்'. இதற்கு

(11-ம் பக்கம் பார்க்க)

1958

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

தீபாவளிப் பண்டிகை ஏற்பட்டசரித்திரத்தை சித்திரம் மூலம் காணுங்கள்.

வழமைக்காரர்களுக்கு இனமாகக் கலண்டர் கொடுக்கும் அன்பர்களுக்கு

லீலாவின் கடிதம்

அன்புடையீர்!

தாங்கள் வருஷா வருஷம் உங்கள் வழமைக்காரர்களுக்கு கலண்டர்கள் கொடுத்து வருகிறீர்கள். அச்செய்கையில் ஓர் மாற்றம் செய்ய நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியாயின் ஏன்? நீங்கள் லீலா தமிழ் பஞ்சாங்க சித்திரக் கலண்டரையும், லீலா சிங்கள பஞ்சாங்க சித்திரக் கலண்டர் இரண்டையும் வாங்கி இனமாக வழங்கக் கூடாது?

இதுவுமல்லாமல், சூழ்நிலைக்கேற்ப பாஷைப் பிரச்னைக் கொள்கையில் ஓர் நடு நிலைமைக் கொள்கையை அனுசரித்து 'ஐந்து திகதிக் கலண்டர்' தயாரித்துள்ளோம். இதுவே இலங்கையில் முதல் முறையாகும்.

நாம் எமது தயாரிப்புகளைப்பற்றி மிகைப்பட எதுவும் கூறவில்லை. எமது தயாரிப்புகளைப் பார்த்துத் தீர்மானித்துக்கொள்ளுங்கள்.

தாங்கள் ஒரு தபால் கார்ட் எழுதினல் அல்லது 5924, 7452க்கு போன் செய்தால், கொழும்பு நகரசபைக்குட்பட்டால் எங்கள் தயாரிப்புகளைத் தங்கள் பார்வைக்கு எமது பிரதிநிதி மூலம் அனுப்பிவைப்போம்.

இங்ஙனம்,
நல்லாதரவு கோரும்,
லீலா ஸ்டோர்ஸ்.

249, நொறிஸ் ரோட்,
கொழும்பு-11.

எங்கள் தயாரிப்புகள் தற்போது இலங்கையில் மிக மேன்மையானதெனவும் விலை சகாயமானதென்றும் நாம் உறுதி கூறுகின்றோம்.

தாங்கள் பார்த்து உங்கள் தீர்ப்பைக் கூறுங்கள்.

மேன்மையான தயாரிப்புகளைக் கொடுத்து உங்கள் வழமைக்காரர்களுடைய நன்மதிப்பைப் பெறுங்கள்.

'ஷிரிபா' லிம்ப்ரிக்
(Regd. T. M. 16406)

'குமாரி' கேம்ப்ரிக்
(Regd. T. M. 17884)

'மொடென்டெக்ஸ்'

'ஷிரிபா' லிம்ப்ரிக், 'குமாரி' கேம்ப்ரிக், 'மொடென்டெக்ஸ்' கழுவக்கூடியவை, சுருங்காதவை, நிறம் மங்காதவை என்பதற்கு உத்தரவாதம் பெற்றுள்ளன.

புடவை ஓரங்களில் 'ஷிரிபா' 'குமாரி' அல்லது 'மொடென்டெக்ஸ்' என்ற வார்த்தைகள் காணப்படாவிடில் அவை அசல் புடவையல்ல என்பதாகும்.

ஏக இறக்குமதியாளர்கள்:

தி யுனைட்டெட் ட்ரேடிங் கம்பெனி,
(வர்த்தகர்கள்)

தந்தி: "MODERN" 206, கெய்லர் வீதி, கொழும்பு. 5888.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூறு செய்யுட்களில் கடவுட் கொள்கை

## உவமைகள் வாயிலாக புகுத்தப்பட்டிருக்கிறது

### கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் வகுப்பில் சங்க நூல் தொடர் உரை

**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புது முயற்சி சங்கம் வைத்து மொழி வளர்த்த தமிழ் நாட்டிலே கூட தற்போது இல்லாத ஒரு நன் முயற்சியாகும். பழந்தமிழ் நூல்கள் பற்றி பல பேரறிஞர்கள் ஒரே மேடையிலோ அல்லது வெவ்வேறு மேடைகளிலோ பேசியிருக்கலாம். ஆனுல் ஒரே நூலைப்பற்றி ஒரே நபர் தொடர்ச்சியாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவது இலங்கையிலே இதுவே முதல் தடவை. இத்தகைய ஏற்பாட்டைச் செய்ய முன்வந்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்தை தமிழ் பேசும் மக்கள் எவ்வளவு பாராட்டினுலும் தகும்.**

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு தமிழ் உணர்வு ஊட்டவும் பழந் தமிழ் நூல்களிலுள்ள விழுமிய கருத்துக்களை அறிமுகப்படுத்தவும் விரும்பி கொழும்புத் தமிழ்ச் சங்கம் வெள்ளவத்தை 54 வது ஒழுங்கையிலுள்ள சங்கப் பணி மனையில் ஞாயிற்றுக்கிழமைகளில் பி. ப. 4.30 மணிக்கு தமிழ் வகுப்புக்கள் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது. முதல் வகுப்பு சென்ற ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடந்தது.

கொழும்பு றேயல் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. இ. லட்சுமணனைக் கொண்டு புறநானூறு என்ற பொருள்பற்றி நாலு சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்னுரின் முதற்சொற்பொழிவோடு தமிழ் வகுப்பு சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாயிற்று.

கொழும்பு தமிழ் சங்கத்தின் முயற்சி மிகப் பயனுள்ளதும் அவசியம் ஆதரிக்க வேண்டியதும்; என்பதைப் பலர் அங்கு கூடியிருந்து திரு. லட்சுமணனின் புறநானூறு சொற்பொழிவை அக்கறையோடு கேட்டது உறுதிப் படுத்துவதாக இருந்தது.

#### தமிழ்க் காற்று

சங்கத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமிழ் வகுப்பைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சங்கம் செய்துள்ள ஏற்பாட்டின் நோக்கத்தைத் தெரிவித்துவிட்டு தொடர்ச் சொற்பொழிவுகள் இடையருது நடப்பது தமிழ்ப் பெரும் மக்களின் ஆதரவைப் பொறுத்துத்தான் இருக்கிறதென்று கூறினுர். கூட்டத்தில் கூடியிருந்தவர்களின் தொகையைப் பார்க்குமிடத்து தமது முயற்சிக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதைத் தாம் பிரத்தியட்சமாகக் காண்பதாகவும் அவர் கூறினுர்.

தலைவர் தமது உரையில் திரு. லட்சுமணனைப் போன்ற தமிழ் அறிஞர்கள் பலர் பல்வேறு பழந் தமிழ் நூல்களைப்பற்றியும் அடுத்து நடக்கவிருக்கும் வகுப்புகளில் தொடர்ச்சியாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்தவிருப்பதாகவும் எனவே சுமார் ஒரு மணி நேரமாவது அவற்றைக் கேட்க வரும் தமிழ் பேசும் மக்களுக்கு சுத்த தமிழ்க் காற்றுச் சுவாசிக்கும்போது கிடைக்கும் என்றும் அந்தத் தமிழ்க் காற்று ஞாயிற்றுக்கிழமைகளில் கால்பேஸ் மைதானத்தில் கிடைக்கும் கடல் காற்றைவிட எவ்வளவோ மேலாக இருக்கும் என்றும் நகைச் சுவையோடு தெரிவித்தார்.

#### 'புறம்' என்ருல் என்ன?

திரு. லட்சுமணன் ஒரு மணி நேரம் தமது முதல் சொற்பொழிவை நிகழ்த்தினுர். புறநானூறு என்ருல் என்ன?—அதில் எந்த எந்தப் பொருட்கள் பற்றிப் பாடப்பட்டிருக்கிறது என்பதையும் அத்தோடு நூல் வரலாற்றையும் அதில் உள்ள கடவுள் கொள்கையையும் விளக்கிப் பேசினுர். அவர் பேசியதன் சுருக்கம் வருமாறு:

''பழந்தமிழ் நூல்களில் எட்டுத்தொகையின் சிறப்பு சொல்லுந்தரமன்று. தொகுக்கப்பெற்ற பாடல்களையுடைய எட்டுத் தொகையில் ஒன்றுதான் புறநானூறு. புறத்தைப் பற்றி பல்வேறு புலவர்கள் பாடிய நானூறு செய்யுட்கள் இதில் உள்ளன. எனவேதான் இதற்கு புற நானூறு என்ற பெயர்.

''அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பொருட்களில் இன்பம் அல்லது சுகம் தவிர்ந்த ஏனைய இரண்டும் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கின்றன. இன்பம் அக நானூற்றில் உண்டு.

''புறநானூற்றில் உள்ள அறம் பொருள் என்ற பிரிவின் கீழ் வரும் பாடல்களில் கொடை, வீரம், அரசு, சமூக வாழ்வு முதலான பல்வேறு விஷயங்கள் பற்றி அழகான கருத்துக்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

#### தமிழின் தொன்மை

''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விழுமிய கருத்துக்களை அழகுற எடுத்தியம்பும் அற்புதமான பாடல்களைத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் யாத்தனர் என்ருல் அதிலிருந்து ஓர் உண்மை புலனுகிறது அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழி வளம் பெற்று விளங்கியிருக்கிறது என்பது புலனுகிறது. சிறப்பான செய்யுள்களை நல்ல முறையில் கருத்தைக் கவரும் வகையில் யாக்கும் பணிக்கு உதவுமளவுக்கு ஒரு மொழி வளம் பெற அது தோன்றி எவ்வளவு காலம் பிடிக்கலாம்? இந்த நிலக்களனில்

(12-ம் பக்கம் பார்க்க)

# யார் குற்றவாளி?

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மேல் அவனுல் கடிதத்தைப் படிக்க முடியவில்லை ஆனந்தனுக்கு இந்த உலகமே தலைகீழாகச் சுழல்வது போன்றிருந்தது. ஆயிரம் சம்மட்டிகள் ஏககாலத்திலே தலையைத் தாக்கியது போன்ற உணர்வு தோன்றியது. அவன் கண்கள் காக்கையின் இறகுகள் போன்று அடித்துக்கொண்டன. மனம் குமுறியது. கோபம் ஏமாற்றம் எல்லாமாகச் சேர்ந்து அவனின் இதயத்தில் இடித்தன.

இந்த நாட்டில் இருப்பதே அவனுக்குப் பாரமாகத் தோன்றியது. பர்மா செல்லும் பட்டாளக் கோஷ்டியுடன் ஆனந்தனும் பயணத்திற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கு ஒரு தந்தி வந்தது ''உன்னுடைய மாமா தாக்குப் போட்டு இறந்துவிட்டார்'' என்று கிராம விதானை அனுப்பியிருந்தார். அவனுடைய முகத்திலே ஒரு ஏமாற்றமும் தோன்றவில்லை; வாய் மட்டும் 'அவர் மனிதன்' என்று முணுமுணுத்தது.

இரண்டு வருடம் இராணுவத்தில் கடுமையாக உழைத்தான். ரங்கூன், மலாயா என்று சுற்றினுன். ஆனுல் அவனது உள்ளம் மட்டும் கமலாவின் உருவ நிழலை வலம் வந்தது. அன்று தோன்றிய காதல் அவன் உள்ளத்திலே அணையாத நந்தா விளக்காக நிலை பெற்று விட்டது. கடுமையான உழைப்பும் கமலாவின் கவலையும் அவனை நாளடைவில் நரம்பு மனிதனுக்கி விட்டன. இரும்பு போன்ற அவனது இதயத்திலே அன்று இடித்த இடி இரத்தக் கண்டலாக ... டது. அவனைச் ... பிடித்து விட்டது. இராணுவ உழைப்புக்கு லாயக்கற்றவனுகிவிட்டான்; சீட்டுக் கிழிக்கப்பட்டு வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டான்.

பண்ணையூர் சின்னையா வீடென்றதும் அவனுக்கு அது எட்டிக் காயாக கசந்தது. கண்டி, மாத்தளை, நுவரெலியா என்று மலைநாட்டிலே காசுள்ளவரை இருமி இருமிச் சுற்றித் திரிந்தான். கையிலே பசை இல்லாது போனதும் உள்ள சொத்தையாவது விற்றுக் கிட்டியதைக் கொண்டு எங்காவது கிளம்பி விடலாம் என்ற உத்தேசத்துடன் எப்படியோ மனதைக் கட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

கமலா ஓடி விட்டாள், சின்னையா இறந்துவிட்டார், எனவே வீட்டிலே யாருமிருக்க மாட்டார்கள்—அது பூட்டியிருக்கும் என்றுதான் அவன் நினைத்து அங்கு வந்தான். ஆனுல் அது தவறு என்பதை அவன் அறிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. வாசல் படியிலே கால் வைத்ததும் அவனை வரவேற்ருள் ஒரு நங்கை. நிமிர்ந்து பார்த்தான். என்ன பேசுவது—எப்படிப் பேசுவது, என்று அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் கமலா—ஆம் கமலா தான் அந்தப் பெண். உடல் வியர்த்தது—உள்ளம் குமுறியது; கால்கள் நிலைகொள்ளவில்லை.—பேச நா எழவில்லை—வைத்த விழியை வாங்கவும் மனமில்லை. அவளின் கழுத்தை நெரித்து அப்படியே அவளைக் கொன்றுவிடலாமோ என்று எண்ணினுன்—ஆனுல் அதற்கு கையிலே வலுவில்லை. காரி முகத்திலே உமிழலா மென்று பார்த்தான்—அதற்கும் ... இந்த ... நிலையிலே கமலா பேசக்

(12-ம் பக்கம் பார்க்க)

தீபாவளி வாழ்த்து!

எங்கள் நண்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் இந்த மங்களகரமான நாளில் நல்வாழ்த்து கூறுகிறோம்.

பெட்டா பார்மஸி

பிரபல இங்கிலிஷ் மருந்து வியாபாரிகள்

23, டாம் வீதி, கொழும்பு.

டெலிபோன்: 7213. தந்தி: "Tinctures"

தீபாவளிப் பண்டிகையின் நல்வாழ்த்துக்கள்

எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அனைவருக்கும் உரித்தாகுக!

திறமான வைரங்கள், அழகு மிக்க ஆபரணங்கள் எல்லாவற்றிற்கும் சிறந்த இடம்.

யப்பான் ஜுவல்லர்ஸ்,

163, புதுச்செட்டித் தெரு, கொழும்பு.

டெலிபோன்: 5489.

64, கன்னுதிட்டி ரோடு, யாழ்ப்பாணம்.

டெலிபோன்: 518.

ஷெல் மார்க்



அலுமினியப் பாத்திரங்கள்

தீபாவளிப் பண்டிகையின் நல்வாழ்த்துக்களை

எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், மற்றும் அன்பர்களுக்கும் கூறுகிறோம்.

ஷெல் மார்க் அலுமினியப் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள், அன்பளிப்புச் சாமான்களும் மலிவாகக் கிடைக்கும் இடம்:

சி. வி. பாட்,

218 - 220, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:

டாம் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

படவிமர்சனம்:

# திருட்டு ராமன்

திருட்டுப் பழக்கம் இருக்கிறதே—அது ஒரு மிகப் பயங்கரமான பழக்கம். அதிலும் சின்ன வயதிலே அந்தப் பழக்கம் ஏற்பட்டுவிட்டால் அதிலிருந்து விடுபடுவது ரொம்பக் கஷ்டம். அப்படி ஒருகால் தட்டித் தவறி விடுபட்டாலும்கூட சமூகம் ஒருமுறை திருட்டு செய்தவர்மீது கட்டிய திருட்டுப் பட்டத்தை எப்பொழுதுமே வாபஸ் வாங்கமாட்டாது. அதனால் திருட்டுத் தொழிலைச் செய்தவனுக்கு மட்டுமல்லாமல் அவன் குடும்பத்துக்கே கேவலம். சமூகத்தால் ஒதுக்கப்பட்டு அவமானத்தால் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்படும்.

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் அளிக்கும் திருட்டு ராமன் என்ற படம் இக்கருத்தைத்தான் வலியுறுத்துகிறது.

திருட்டு ராமுவாக நாகேஸ்வரராவ் நடிக்கிறார். சுபாவமாகவே அவர் ஒரு சோக நடிகர். அவர் நடிப்பு இடைவேளைக்குப் பின் நன்றாக சோபிக்கிறது. உண்மையைச் சொன்னால் கதையின் விறுவிறுப்பான கட்டங்கள் இடைவேளைக்குப் பின்தான் இடம்பெற்றிருக்கின்றன. தன் தங்கை லட்சுமியை டாக்டர் வீட்டில் சந்தித்த போதும், தன் காதலி சீதாவிடம் தான் உத்தமன் எனக் கூறி மன்னிப்புக் கேட்கும் கட்டங்களிலும் நாகேஸ்வரராவின் நடிப்பு உருக்கமாக இருக்கிறது. டாக்டர் வீட்டில் கடிகாரம் திருட்டுப் போக, ராமுவை டாக்டரின் அண்ணா அடிக்கும் போது, அதைப் பார்த்து லட்சுமி அழுவதும் பார்ப்பவர்களைக் கண்கலங்க வைக்கிறது.

ராமுவின் காதலி சீதாவாகச் சாவித்திரியும், தங்கை லட்சுமியாக ஜமுனாவும் நடித்துள்ளார்கள். பார்ப்பவர்களின் மனதில் கதாநாயகி யார் என்ற ஐயம் ஏற்படுகிறது. அவர்கள் பாத்திரத்திற்கு ஏற்ப நன்றாக நடித்துள்ளார்கள். மற்றும் வில்லன் ஆர். நாகேஸ்வரராவ், ஜக்கையா ஆகியோரும் நடித்துள்ளார்கள். ராமுவின் தாயாராக நடிக்கும் ஹேமலதா இறக்கும்

(13-ம் பக்கம் பார்க்க)


**G. C. E. ஜி. ஸி. ஈ.**

- தமிழ் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தியடைவது சுலபமாகிவிட்டது.
- ஜூலை — டிஸம்பர் பரீட்சைகளுக்கு அற்லஸ் ஹோல் அளிக்கும் புதுப் பாடங்கள் தயாராய்விட்டன.
- எல்லாப் பாடங்களுக்கும் கடந்த கால பரீட்சைகளின் வினா விடைகள் உண்டு.
- அத்தோடு மாதிரி வினா விடைகளும் தனியாக உண்டு
- தனித் தனிப் பாடத்துக்கு விலை ரூ. 3-00. தபால் செலவு சதம் 35.

விவரங்களுக்கு எழுதுங்கள்:

**அற்லஸ்ஹோல்,** தபால் பெட்டி: 649.

போன்: 9759. கொழும்பு.



**கனகலிங்கம் சுருட்டு**




சுருட்டுஉலகிலேயே ஓர் புதுமை

உயர்ரக புகையிலையைக் கொண்டுதயாரிக்கப்படும் கனகலிங்கம்சுருட்டையே பாவியுங்கள்.

கனகலிங்கம் சுருட்டையே பாவியுங்கள்

கனகலிங்கம் சுருட்டையே பாவியுங்கள்

விநியோகஸ்தர்கள்:

V.கனகலிங்கம்பிள்ளை & சன்ஸ்,

17, சென் யோன்ஸ் தெரு, கொழும்பு.

போன்: 5883. தந்தி: "கன்சிகார்ஸ்"


# யார் குற்றவாளி?

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தாள். "ஏன் வெளியே நிற்கிறீர்கள்? உள்ளே வரலாமே"

"அடி பாதகி நீயா பேசுகிறாய்?" என்று மட்டும் அடக்கி வைத்திருந்த மனவேதனை எல்லாவற்றையும் வெளிக்காட்டும் வகையில் முயன்று பேசினான் ஆனந்தன்.

கமலாவுக்கு உண்மையிலேயே பரிதாபமாகத்தானிருந்தது. என்றாலும் அவள் தன் நிலையை உணர்ந்ததும் ஆனந்தனோடு அன்பர்சப் பேசுவதால் ஏற்படக்கூடிய விபரீதத்தை முன்கூட்டி அறிந்ததால் சற்றுக் கடுகடுப்பாகவே பேசினாள்.

"என்னைப் பாதகி என்று கூற உங்கள் நா கூசவில்லையா? பாதகம் செய்தது யார்?"

"யாரா? காலமெல்லாம் இன்பக் கனவுகள் கண்டு கமலா என் இல்லற ஜோதி என்ற நினைப்பில் அவளுக்காகவே உயிர்வாழ்ந்த என்னை இக்கதிக்கு ஆளாக்கியவள் யார்? அவளைப் பாதகி என்று அழையாது வேறு எப்படி அழைப்பது? நான் சீரழிந்தது போகட்டும். பெற்ற தந்தையைக்கூடப் பிணமாக்கினாயே உன் பருவப் பசி காரணமாகப் பெண் பிசாசே, உன்னைப் பாதகி என்று சொல்லாது வேறு எப்படிச்சொல்வது?"

"பேஷ்! நல்ல விளக்கம். ஆனால் அதில் ஆராய்ச்சியோ அல்லது அறிவோதான் இல்லை. மிஸ்டர் ஆனந்தன் நான் சொல்வதையும் சற்றுக் கேளுங்கள். நீங்களும் மனிதர்தானே. காதல்—காதல் என்று வாயால் சொன்னால் அல்லது எழுதிப் படித்தால் போதுமா? காதல் கிட்டியதும் கல்யாணம் நடந்தேற வேண்டியதன் அசியயத்தை நீங்கள் அறியத் தவறியது ஏன்? முறை மகன் என்ற உரிமையில் கட்டுப்பாடு எதுவுமின்றி என்னோடு கூடிப் பழகி என் பருவத் துடிப்பை நாளிலும் பொழுதிலும் அதிகப்படுத்தி வந்த தாங்கள் என்பொறுமையை எவ்வாறெல்லாம் சோதித்தீர்கள் என்பதை உங்களால் இப்பொழுதாவது நினைவுகூர முடிகிறதா? கல்யாணம் என்றதும் அதைத் தாமதிக்க காரணம் காட்டினீர்கள். இராணுவ சேவைக் கால ஒப்பந்தம்முடியட்டும், பணம் சற்றுச் சேரட்டும் என்று சொன்னீர்கள். கேவலம்—பணமும், பதவியுமா பருவப் பெண்ணுக்கு பெரியவை? இதை எத்தனை தடவை தங்களுக்கு நாசூக்காக எழுதினேன். புரிந்துகொண்டீர்களா? அதைப் புரிந்துகொள்ள உங்களுக்கு மட்டுமென்ன நூற்றுக்கு 99 வீதமான ஆண்களுக்கே முடிவதில்லை"

"போதும் நிறுத்து. அதற்காக குலப் பெருமையையும் நிர்மூலமாக்கி, பெற்றவனையும் பிணமாக்கித்தான் உன் ஆசைக் கனலைத் தணிய வைக்க வேண்டும்—அதற்கு சிங்கப்பூர்க்காரனோடு ஓடிப் போக வேண்டும்—அதுதான் யோக்கியம் இல்லையா?"

"அதை யோக்கியம் என்று நான் கொள்ளவில்லை. அது சர்வசாதாரணம். தவிரவும் பெற்ற தந்தை என் பொருட்டு மடியவில்லையே. பாரிச வாதம்தான் அவரைப் பலிகொண்டது. நானும் முன்பின் தெரியாத எவருடனும் போய்விடவில்லை. இதோ அவர் வருகிறார். வேண்டுமானால் பாக்கியுள்ள விபரங்களை அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

அங்கு வந்த நாகராஜன் ஆனந்தனைக் கண்டதும் ஓடிவந்து சென்று அவனை ... குழந்தைபோல அழுதான். ஆனந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. "நண்பா நான் உனக்கு பெரும் துரோகம் செய்துவிட்டேன். என்னால்தான் உனக்கு இந்தக் கதி இன்று. என்னை மன்னித்துவிடப்பா—மன்னித்துவிடு ஆனந்......"

"என்ன சொல்கிறாய்? எதற்கு மன்னிப்பு?"

"ஆனந், எழிலும் இளமையும் உள்ள ஒரு பெண்—பிறந்த நாள்தொட்டு நன்கு தெரிந்தவள்—தானாக முன்வந்து தனக்கு வாழ்வளிக்கும்படி கேட்டால் எந்த வாலிப மனந்தான் இணங்காது இருக்க முடியும்? நண்பன் சொத்தாயிற்றே என்று முதலில் மறுக்கத்தான் செய்தேன். என்றாலும் ஈற்றில் என் பருவத் துடிப்பும் கமலாவின் பணம்—சொத்துக்கு விரும்பிய என் தந்தையின் பிடிவாதமும் வென்றன. தந்தையின் விடாப்பிடியின்பேரிலேயே உனக்கு அந்தக் கடிதத்தைக்கூட எழுதினேன். அந்தக் கையெழுத்திலேயே நீ ஒரு வித்தியாசத்தைக் கண்டிருப்பாய் சற்றுக் கவனமாகக் கடிதத்தைப் படித்திருந்தால்"

"எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இப்பொழுது எனக்கு என்னைப் பற்றிய கவலையில்லை. யாருக்காக நான் வாழ்ந்தேனோ அவளுக்கு வாழ்வளிக்க என் நண்பன் நீ இருக்கிறாய். மாமாவைக் கடைசி முறையாவது பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஒரே ஒரு குறைதான்"

"ஆமாம் அவர் விஷயமாக என் அப்பாவின் தந்தி உனக்குக் கிடைத்ததா? வேண்டாம் வேண்டாம் என்று நான் எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்கவில்லை. என் கல்யாணத்துக்கு முன்னதாகவே படுத்த படுக்கையாகக் கிடந்து அவர் இறந்த செய்தியை கமலாவின் பிரிவால் தூக்குப் போட்டு மாண்டதாகத் திரித்து என் கல்யாணத்தின் பின் அனுப்பினார் என் அப்பா உன்னை இனி எப்பொழுதுமே இந்தப் பக்கம் திரும்பாமல் செய்வதற்காக" இப்படிச் சொல்லிவிட்டு அவன் துக்கம் தாங்காது கோவென்று அழ ஆரம்பித்துவிட்டான்.

ஆனந்தனுக்கு நண்பன் மீது பரிதாபந்தான் ஏற்பட்டது. வாலிப முறுக்கு பால்ய நட்பைக்கூட வென்றுவிட்டதே என்று மட்டும் எண்ணினானே தவிர அதற்காக நண்பனை வையவில்லை. பதிலுக்கு தேம்பித் தேம்பி அழுத அவனைத் தேற்றினான். அதிகம் பேசியதால் ஆனந்தனுக்கும் இரத்தம் கொட்டு கொட்டு என்று கொட்டியது. அப்படியே திண்ணையில் சோர்ந்து விழுந்துவிட்டான். நண்பன் தண்ணீர் கொண்டு வர வீட்டுக்குள் ஓடினான்.

★

கண் விழித்த ஆனந்தன் தான் தனிமையாக அங்கு படுத்திருப்பதை உணர்ந்தான். அந்த வீட்டில் இருப்பது அவனுக்கு நிராத வேதனையைக் கொடுத்தது. எழுந்தான். எழுந்து நடந்தான். ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல எதேச்சையாக நடந்து சென்றான். எங்கு நடந்து செல்கிறோம் என்ற இலக்கே அவனிடமில்லை. எங்கு சென்றால்தான் என்ன, தமது முடிவு நெருங்கிவிட்டது என்ற நினைப்புபோலும்! இதற்கிடையில் குற்றவாளி யார்? கமலாவா, நண்பனா, கிராம விதானையா அல்லது தானே தானா? என்ற கேள்விக்கு விடை காண வேண்டுமென்ற எண்ணம்மேலெழுந்தது. கல் தடுக்கி கீழே விழுந்தான் அவ்வளவுதான். நினைவு நின்றது—தேகம் ஜில்லிட்டது. இதுவரை சாகாமல் செத்துக்கொண்டிருந்த அவன் அப்பொழுது அந்த அவஸ்தைப் படியைத் தாண்டிவிட்டான்.

★

தண்ணீர் கொண்டுவரப் போன நாகராஜன் கமலாவின் கோலத்தைக் கண்டு கலங்கிப்போனான். கோவென்று அலறித் துடித்தான். கால்களைப் பற்றிக்கொண்டு" என்னை விட்டுப் போய்விட்டாயா?" என்று கதறினான். அவலக் குரல் கேட்டு ஊரே அங்குதிரண்டு வந்தது. மரணத்துக்குக்காரணம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகக் கூறினார்கள். கிராம விதானையாரின் கலங்கிய கண்கள் தலையணை ஓரத்தில் தெரிந்த காகித மடிப்பைக் கண்டன. எடுத்துப் படித்துப் பார்த்தார்:—

"இத்தால் சம்பந்தப்பட்டவர்கள் அறிய வேண்

(13-ம் பக்கம் பார்க்க)

## புறநானூறு செய்யுட்களில்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து பார்த்தால் தமிழன் தொன்மை நன்கு புலனாகும்.

### அச்சுப் பதிப்புகள்

"புறநானூறு பல காலமாக ஏட்டுப் பிரதி வடிவிலேயே இருந்து குறிப்பிட்ட ஒரு சிலரின் பார்வைக்கே எட்டுவதாயிருந்தது. இதை அச்சு நூலாக்கி யாவர் கையில் தவழ வைக்கும் முயற்சியை முதலில் மேற்கொண்டவர் டாக்டர் உ. வே.சாமிநாத ஐயர் ஆவர். சுமார் 60 வருஷங்களுக்கு முன்னால் அதாவது 1894-ல் புறநானூறு முதல் பதிப்பை அவர் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து 1923ல் இரண்டாவது பதிப்பு வெளியாயிற்று. முதலில் 246 செய்யுள்களுக்கே உரை எழுதப்பட்டிருந்தது. இந்தக் குறையை நீக்கவே ஔவை துரைசாமிப்பிள்ளை இரண்டாவது பதிப்பை வெளியிட்டார். இப்போது எல்லாச் செய்யுள்களுக்கும் உரை எழுதப்பட்டுள்ளது. பல அறிஞர்கள் தத்தமக்குத் தோன்றியவாறு உரை எழுதி பல பதிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்"

### கடவுட் கொள்கை

புறநானூறில் உள்ள கடவுள் கொளகை பற்றித் திரு லட்சுமணன் தொடர்ந்து பேசுகையில் அதில் கடவுள் நேரடியாகச் சம்பந்தப்பட வேண்டிய அவசியம் எதுவும் இல்லாதபடியால் உவமைகள் வாயிலாக கடவுட் கொள்கை புகுத்தப்பட்டிருக்கிறது என்று கூறி அதற்கு ஆதாரமாக பல செய்யுள்களைப் பாடிக் காட்டினார்.

அச்செய்யுட்களில் சிவன், முருகன், விஷ்ணு போன்ற கடவுளர்களைக் குறிக்கும் சொற்றொடர்கள் இருப்பதை எடுத்துக்காட்டி புறநானூறு கடவுட் கொள்கையை வலியுறுத்த உதவும் ஓர் பண்டைத் தமிழ்ச் செய்யுட் கோவை என்று விளக்கினார்.

குறிப்பு:

திரு லட்சுமணனின் புறநானூறு பற்றிய இரண்டாவது சொற்பொழிவு 20-10-57 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4.30 மணிக்கு தமிழ்ச் சங்கப் பணி மனையில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர்களுக்கு ஆதரவு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியாகிய நூல்களில் ஒன்றினை ஒவ்வொரு மொழியிலிருந்தும் தெரிந்தெடுத்துப் பரிசில் வழங்குதல் என்ற திட்டத்தின்கீழ் தமிழ் மொழியில் தமிழின்பம் என்ற ரா. பி. சேதுப்பிள்ளையின் கட்டுரை நூலுக்குப் பரிசு தரப்பட்டது. 1952க்கும் 1955க்கும் இடைப்பட்ட காலத்தில் பரிசு வழங்குதலென்ற திட்டத்தின்கீழ் சிறு கதையின் தந்தையாகிய பேராசிரியர் கல்கி அவர்களின் அலையோசைக்குப் பரிசு வழங்கப்பெற்றது.

### பரிசுத் தொகை உயர்வு

சென்னை அரசாங்கம் எழுத்தாளர்கள் சிலருடைய நூல்களுக்கு 500 ரூபா பரிசு அளித்து வந்ததை இப்பொழுது 1000 ரூபாவாக உயர்த்தியிருக்கிறது.

### முத்தமிழ்கலைஞர்களுக்கு பாராட்டு

இவ்வருடம் சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை அரசாங்கம் முத்தமிழ் கலைஞர்களை மனமாரப் பாராட்டி மகிழ்ந்தது. தமிழ்ப் புலவர் டாக்டர் மு. வரதராசனார்; நாடகப் பேராசிரியர் ப. சம்பந்த முதலியார்; இசையரசி கே. பி. சுந்தராம்பாள் முதலியோரே அவர்களாவர். அன்றைய விழாவிற்கு கவர்னர் தம்பதிகள் அறிஞர்கள்—கலைஞர்கள்—முதலமைச்சர், அமைச்சர்கள்—பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர்.

### கடைசிக்காலத்தில் கைகொடுத்தல்

சிறந்த எழுத்தாளர்களாக உள்ளவர்கள் தம் வயது முதிர்ந்த காலத்தில் வறுமையும் பிணியும் பீடித்தவர்களாக விளங்கினால் கடைசிக்காலத்தில் அரசாங்கம் உதவித் தொகை அளித்தல் வேண்டுமென்ற எண்ணம் அறிஞர் பலருக்கிருக்கிறது. பரலி சு. நெல்லியப்பர்போன்ற பெரிய எழுத்தாளருக்கு இத்தகைய ஆதரவு கொடுக்க வேண்டுமென்பது சென்னைத் தமிழ் எழுத்தாளரின் கருத்தாகும்.

### கூட்டுச் சங்கங்கள் வேண்டும்

சீன தேசத்தில் உள்ளதைப்போல நம் நாட்டில் எழுத்தாளருடைய கூட்டுச் சங்கங்கள் அமைக்கப்பட்டால் கூட்டுறவு முறையில் எழுத்தாளர்கள் தமக்கு வேண்டிய ஆதரவினைப் பெறலாம். 1947க்குப் பின் நிறுவப்பெற்ற சீன எழுத்தாளர் கூட்டுப் பேரவை செய்யுள் எழுதிய இளைய எழுத்தாளர்கள் 200பேரது படைப்புகளைத் தொகுத்து வெளிப்படுத்தியது.

### தமிழர் கலைகளும் கலைக் கழகமும்

இலங்கை விடுதலையடைந்ததும் இங்கு ஒரு கலைக் கழகத்தை நிறுவியதாக முன்னர் கூறினேன். இக் கலைக் கழகம் தமிழர்களையும் சிங்களவர்களையும் வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படும் என்ற உறுதிமொழியை அரசாங்கம் கூறியது. தமிழர் கலைகளைப் பொறுத்தளவில் உருப்படியான எதையும் இக் கலைக் கழகம் செய்துள்ளதாகத் தெரியவில்லை. அறிக்கைகள் வெளியிடுவதைக்காட்டிலும் அரசாங்கம் ஆக்கப் பணிகளில் துரிதமாக இறங்க வேண்டும். யாழ்—கலைக் கழகம் திட்டமிட்ட கலை ஆக்கச் செயல்கள் விரைவில் நற்பயனைத் தருமென எதிர்பார்ப்போம்.

# குட்டு வெளிப்பட்டது

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டது. எல்லோரும் மண்டபத்தில் கூடினார்கள். கோபாலின் படத்தைக் கண்டோர் அதற்குத்தான் கட்டாயம் முதலாம் பரிசு கிடைக்கும் என்று கூறினார்கள். மத்தியஸ்தர் எழுந்து எல்லோருடைய மார்க்குகளையும் வாசித்தார். கோபாலுக்கு எல்லோரிலும் குறையக் கிடைத்தது. அப்படத்தை எடுத்து மத்தியஸ்தர், "இது சுந்தரம் என்பவரால் கீறப்பட்டிருக்கின்றது. அவர் தன் பெயரைச் சித்திர ரூபமாக இதில் வரைந்திருக்கின்றார். இந்த விசித்திரம் கோபாலுக்கு விளங்கவில்லை" என்றார். எல்லோரும் கோபாலைப் பார்த்தார்கள். அவன் அங்கு நின்றால்தானே அவர்கள் கண்களிற்படுவான்.

—செ. யோ. யோசப்
வ. ம. இல. 154
மானிப்பாய்

# யார் குற்றவாளி

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

டியது—நான் விஷம் அருந்தி தற்கொலை செய்துகொள்வதற்கு நானே காரணம். குற்றவாளி நானே. இதுபற்றி விசாரணை நடத்த வேண்டிய அவசியமே இல்லை.

இப்படிக்கு
கமலா"

அனாதையாக நடு ரோட்டிலே விழுந்து மடிந்த ஆனந்தனின் சடலம் அரசாங்கத்தாலும் இல்லக்கிழத்தியாக கட்டிலிலே படுத்துக் கண்மூடிய கமலாவின் சடலம் கணவன், உற்றார் உறவினராலும் ஒரேநாளில் பூமாதேவியின் பாதார விந்தங்களில் படைக்கப்பட்டன.

# திருட்டு ராமன்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டத்தில், நன்றாக நடித்துள்ளார்.

நடிகர் ரேலங்கி தமக்கே உரித்தான பாணியில் நடித்தும் இடையிடையே ஹாஸ்ய விருந்தளித்தும் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுவிடுகிறார்.

படத்தில் வரும் பாடல்கள் காதுக்கு இனிமையாக இருக்கின்றன. நடனங்களும் பரவாயில்லை. காட்சி ஜோடனைகளும் ஒளிப் பதிவும் தேவலை. ஆனால் ஒலிப் பதிவு மட்டும் சற்று 'ஓவர்' ஆகிவிட்டது.

கதாசிரியர்: நாசராஜு திருட்டு ராமன் ஒரு கருத்துள்ள படிப்பினை தரும் ஆந்திர நாட்டுக் கதை வசனங்களை உதயகுமார் எழுதியிருக்கிறார்.

டைரக்டர்: கே. வி. ரெட்டி. சம்பவக் கோவையில் சில கட்டங்களில் குழறுபடி ஏற்பட்ட குறையைப் போக்கவோ என்னவோ மிகச் சாதுரியமாக புதுவிதமான ஒரு சண்டையைப் படத்தில் சேர்த்திருக்கிறார். இதைப் பார்க்க அவசியம் படத்துக்குப் போய்த்தானாக வேண்டும்.

—'சபா'


## எல்பின்ஸ்டன் ரெக்ஸி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

ஜெமினி கணேசன், சாவித்திரி,
டெய்ஸிராணி, — காலஞ்சென்ற
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ.
மதுரம், கே. சாரங்கபாணி,
டி. ஆர். ராமச்சந்திரன்
வி. நாகையா

ஆகியோர் நடித்த


## யார் பையன்



இப்பொழுது 4-வது வெற்றிகரமானவாரமாகஓடிக்கொண்டிருக்கிறது!

சென்ட்ரல் (கொழும்பு) ராணி (யாழ்ப்பாணம்) போகம்பரை (கண்டி) ஜோதி (திருகோணமலை)

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணி சனி ஞாயிறு பிற்பகல் 2 மணி ஞாயிறு காலைக்காட்சி 10-00 மணி



பார்ப்போர் உள்ளங்களை ஒருங்கே கவரும்
ஒப்பற்ற திரை ஓவியம்!

நரஸூ
ஸ்டூடியோசாரின்

## இரு சகோதரிகள்

(தமிழ்)



நடிகர்கள்: ஜெமினி கணேசன்-சாவித்திரி-கிரிஜா-எம். என். நம்பியார்-டி. எஸ். துரைராஜ்
வி. கே. ராமசாமி - டி. பி. முத்துலட்சுமி மற்றும் பலர்.
பின்னணி இசை: கண்டசாலா-பி. லீலா-ஜிக்கி-திருச்சிலோகநாதன்-எம் எல் வசந்தகுமாரி
சங்கீதம்: எஸ். ராஜேஸ்வரராவ் — டைரக்ஷன்: வேதாந்தம் ராகவையா
எல்லாவிதமான பாஸ்களும் சலுகைகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



முருகன் (ஜிந்துப்பிட்டி) தினசரி மாலை 6-00 இரவு 9-30 மணி சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணி ஞாயிறு காலைக் காட்சி 10 மணி

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது காண்பிக்கப்படுகிறது! (இரண்டாவது வாரம்!)

ஜெமினி கணேசன், பத்மினி ஆகியோர் நடித்த

## மல்லிகா

மற்றும் கீழ்க்கண்ட 3 தியேட்டர்களில்

சென்ட்ரல் (பருத்தித்துறை) சென்ட்ரல் (நாவலப்பிட்டி) ப்ரீதி (ஹட்டன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துஷ்டப்பையன்

ஓர் ஊரில் ஓர் பணக்காரப் பெற்றோருக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் செல்வம். அவனைப் பெற்றோர்கள் செல்வமாக வளர்த்து வந்தார்கள். பெற்றோர் அளவுக்கு மீறி செல்வம் கொடுத்தபடியால் அவன் கெட்டப்பழக்கங்களைப் பழகி இருந்தான். பாடசாலைக்குப் போனால் பையன்களை அடிப்பதும் அவர்களின் பொருள்களைப் பறித்துத் தொலைப்பதுமாயிருந்தான். பையன்களின் பெற்றோர்கள் ஆசிரியர்களிடம் சொன்னார்கள். எவ்வளவு தண்டனை கொடுத்தும் அவன் திருந்துவதாயில்லை. செல்வத்தை அவன் தந்தை தண்டித்தாலும் தாய் விடமாட்டாள். அவன் துஷ்டன் என்று சொல்பவர்களைத்தான் அவன் திட்டுவான். ஆகையால் அவன் துஷ்டத்தனங்கள் அளவு மீறி போய்விட்டது.

அவன் தினமும் தெருவில் போகும் நாய்களைக் கல்லால் அடிப்பான் பின்னால் போய் அதன் வாலைப் பிடித்திழுப்பான். அன்று ஒரு நாகப் பாம்பு பூந்தோட்ட வேலியில் இருந்தது. செல்வம் சத்தம் செய்யாமல் சென்று அதன் வாலைப்பிடித்து இழுத்தான். உடனே அந்த நாகம் சிறிக்கொண்டு அவனைக் கொத்தி விட்டு ஓடினது. அவன் ஐயோ அம்மா என்று அலறிக் கொண்டு கீழே விழுந்து உயிர் நீத்தான். இச் சத்தத்தைக் கேட்ட தாய் ஓடி வந்து பார்த்தாள். நீலம் பாய்ந்த செல்வ மகனின் உயிரற்ற உடலைக் கண்டு 'ஐயோ மகனே!' என்று கதறி அழுதாள். அந்தச் சத்தம் அவனுக்கு எங்கே கேட்கப் போகிறது?

—பொ. பத்மராணி.
தலவாக்கொல்லை.

## ஆலமரத்துப் பேய்

பாலுவும் சோமுவும் நண்பர்கள். சோமுவின் தகப்பன் பொலீஸ் அதிகாரி. பாலு ஒரு நாள் சோமுவிடம் ஒரு ஆலமரத்தைக் காட்டி இதில் பேய் இருக்கிறதென்று சொன்னான். அதனைக் கேட்ட சோமு அன்று இரவு ஒன்பது மணி இருக்கும் அவ் ஆலமரத்தின் கீழ் நின்றான். அப்பொழுது பாலுவின் தந்தையை திருடர்கள் பிடித்து வைத்திருப்பதைக் கண்டான். உடனே தன் தந்தையை அழைத்து அத்திருடர்களை பொலீஸ் வீரர்கள் இடம் கொடுத்து பாலுவின் தந்தையைக்காப்பாற்றினான். திருடர்கள் தான் ஆலமரத்து பேய் என்று சோமு பாலுவிடம் சொன்னான்.

—தாமோதரம்பிள்ளை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 5.

பெயர்.......................................................

பாடசாலை.......................................................

விலாசம்.......................................................

.......................................................

............................................ ............................................
பெற்றோர் அல்லது அதிபர் கையொப்பம் கையொப்பம்




## முயற்சியும் முன்னேற்றமும்

முயற்சி ஒருவனுக்கு செல்வத்தைப் பெருகச் செய்யும்: முயற்சியில்லா திருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்துவிடும்.

இங்கு காணப்படும் இனிய வார்த்தையை, வள்ளுவப் பெருந்தகை கள்ளமில்லா உள்ளத்தோடு உலகத்தாருக்கு உரைத்து விட்டுச் சென்றார். உலகத்தில் வாழ்பவர்களில் எவர்களாவது உயர்ந்த நிலையில் வாழ வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களாயிருந்தால் அவர்கள் ஒவ்வொருவரிடமும் முயற்சியிருக்க வேண்டும். அந்த முயற்சியில் சோர்வு சிறிதளவாகினும் இருக்கப்படாது. இருந்தால் நிச்சயமாக தோல்வி அடைவார்கள். ஆகவே, அயற்சியில்லாமல் முயற்சி செய்து முன்னேற வேண்டும். இதே கருத்தைத் தான் நமது வள்ளுவப் பெருந்தகை மேற்கண்ட குறள் மூலம் விளக்குகிறார்.

ஒருவன் எத்தகைய தொழிலைச் செய்பவனாகயிருந்தாலும், அவன் அத்தகைய தொழிலிலும், அவனது வாழ்க்கையிலும், முன்னேற்றம் அடைய வேண்டுமானால், முயற்சியையும் ஊக்கத்தையும், கைக்கொள்ள வேண்டும். அத்தோடு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு—சகிப்புத்தன்மை போன்ற, பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அடைக் கோழிபோல் வீட்டுக்குள் அடங்கிக்கிடந்து சோம்பலை வாழ்க்கையின் குறிக்கோளாக்கி நடக்கும் எவனும் முன்னேற்றம் அடைய மாட்டான்., முழு மனதுடன் வாழவும் மாட்டான். இது அனுபவ உண்மை. பசி—பட்டினி—சோம்பல்—இன்னும் இன்னோரன்ன பிற இன்னல்கள் எதிர்த்தும், முயற்சியைக் கைவிடாமல் முன்னுக்கு வந்தோர் பலரை நாம் சரித்திரத்திலே காண்கின்றோம். இந்த இருபதாம் நூற்றாண்டில் எத்தனையோ பெரியார்கள் பத்திரிகை விற்று முன்னேறி வந்தார்கள். ஆகவே மாணவர்களாகிய நாம் ஒரு நாழிகையை யாவது வீணாக்காமல், முன்னேற்றத்திலே போகக் கூடிய பாதையில் அந்த நாழிகைகளை பயன்படுத்துவோம். வருங்காலத்திலே நாம் நொறுங்காத வாழ்க்கை நடத்த வேண்டும். அரசியல் பொருளாதார சமூக வாழ்க்கையிலும் மற்றும் விஞ்ஞான, பூகோள, பௌதிக, ஆராய்ச்சிகளில் நாம் முன்னேற வேண்டும் ஆகவே, அதற்கு வேண்டிய அறிவைப் பெருக்குவதற்கு முயற்சியெடுத்துப் படிக்க வேண்டும். அப்பொழுது நாம் முன்னேறலாம். இன்றைய மாணவர்கள் முன்னேற்றம், முன்னேற்றமென்று சொல்கிறார்களே தவிர முன்னேற்றத்திலே முன்னேக்கிப் போகிறார்களில்லை. வறுமையின் கோரப் பிடியில் அகப்பட்ட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கப் போதிய பணமின்மையால் ஏதோ ஒரு தொழிலில் விடுகிறார்கள். அவர்களில் பலர் தாங்கள் உழைத்தெடுக்கும் ஊதியத்தை ஓர் உன்னதமான வழியிலோ, அல்லது வாழ்க்கையில் உயரக்கூடிய வழியிலோ செலவழியாமல், ஊதாரிகளாக மாறி உதவாத வழியில் செலவழிக்கிறார்கள். இவைகளில் முக்கியமானவை சூதாட்டம்; குடித்தல்; புகைத்தல். இவைகள் முன்னேற்றத்திற்கு மிகவும் முட்டுக் கட்டையாகயிருக்கின்றன. இன்று பள்ளியில் பயின்று வரும் மாணவர்களில் பலர் சினிமாவிலும், கடற்கரைகளிலும், சுருக்கமாகக் கூறப்போனால் எவரும் காணமுடியாத ஒதுக்குப் புறங்களில் சென்று ஒழித்து, ஒழித்துக் குடிக்கிறார்கள்! புகைக்கிறார்கள். ஏன் இப்படியான "கெட்ட நடத்தையென்று" கேட்டால் "பொழுது போக்கிற்காக," 'நிம்மதிக்காக' என்று மழுப்புகிறார்கள். பொழுது போகவில்லை என்றால் குடிப்பதும், புகைப்பதுமாயிருக்க வேண்டுமா.? பகுத்தறிவுப் படிப்பகங்களுக்குச் சென்று அங்குள்ள பத்திரிகைகளையும் நூல்களையும் பார்ப்பது. பள்ளிக்கூடத்தின் சார்பாக கையெழுத்து பத்திரிகை யொன்று நடத்துவது. அப்பொழுது முன்னேற்றம் வரும், பொழுது போக்கும் நல்வழியிலே போகும். நாடும், நானிலமும் நன்கு செழிக்கும். செழுமையும், செந்தளிப்பும், செல்வமும், கொழிக்கும். மக்கள் அனைவரும், மன நிறைவுடனும், மகிழ்வுடனும் வாழ்வார்கள். நாமும் இதைக் கண்டு இன்புற்று வாழலாம். ஆகவே இன்றே முயற்சி செய்து முன்னேறுவோம்.

—ச. மா. பிரான்சிஸ்,
திருகோணமலை.

## உனது ஓய்வு

அன்புத் தம்பி! சென்ற வாரம் நீ எழுதிய மடல் கிடைத்தது. நன்றி. வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? உண்பது, உடுப்பது, உறங்குவது! இவை மூன்றுந் தானா? அல்லவே அல்ல. அதை நீ மறுக்கமாட்டாய் என்று எண்ணுகிறேன். தமிழன் பெருமையை நீ பாடசாலையில் பயின்றிருப்பாய். தமிழனது தீரத்தை நீ அறிந்திருப்பாய். தமிழன் உழைத்தான்-தனக்காகவல்ல; தன்னாட்டிற்காக. தமிழன் வீர சுவர்க்கம் எய்தினான்-தனக்காகவல்ல; தன்னாட்டிற்காக.

அந்தத் தமிழர்-மறத் தமிழர் பரம்பரையில் உதித்தவன் நீ. எனவே நீசெய்யும் ஒவ்வொரு கா[illegible]யையும் பிறருக்குத் தீமை தராதவண்ணம் பார்த்துக்கொள்வது உனது கடமை. உனது ஒவ்வொரு இதயத் துடிப்பும் அவ்வாறே கூற வேண்டும். எனவே, அதற்கான முயற்சிகளை இவ்விளம் பிராயத்திலிருந்தே நீ பயிலுதல் அவசியமாகிறதல்லவா?

உனது வாழ்க்கை பாடசாலை செல்வது, படிப்பது, பசித்ததும் புசிப்பது, படுத்துறங்குவது என்ற ரீதியில் மட்டும் செல்லக் கூடாது. படி; புசி. ஆனால் படுத்துறங்குவதற்கு முன் சிந்தி! சிந்தனை செய். எதை என்று கேட்பாய்? எவ்வாறு பிறருக்கு நன்மை செய்யலாம் என்று சிந்தனை செய். பாடசாலையில் பயிலும் மாணவருக்கு ஓய்வு அதிகம் கிடைக்கும். தொழில் செய்யும் இளைஞர்களுக்கு அப்படியல்ல; ஆனால் வளர்மதியாக வாறும் எதிர்கால இளஞ் சிங்கங்கள் நீங்கள் உங்களது ஓய்வை எங்ஙனம் செலவிடுகின்றனர் என்பதே இன்[illegible]!

உனது நண்பர்களில் சிலர் விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டு இருப்பர். மெச்சத்தக்கதே! 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்ற அமரகவி சுப்பிரமணிய பாரதியின் வாக்கைக் கடைப்பிடிக்கும் அவர்களைப் பாராட்ட வேண்டும்தான். ஆனால் அதற்காக காலை என்றும் மாலை என்றும் கவனியாது, புத்தகத்தைக் கையால் தொடாமலேயே காலத்தைக் கழிக்கும் 'நண்பர்களை' என்னவென்பது? அவர்கள் தானே திருந்த வேண்டும். பிறரால் அவர்களைத் திருத்துவது அரிது. அது யாவருமறிந்த உண்மை.

மேல்நாடுகளில், சிறுருக்கு நீச்சல் பழக்குதல்; மீன் பிடிக்கக் கற்றுக்கொடுத்தல் போன்ற பொழுது போக்குகளை மட்டுமல்லாது அறிவு நிறை புத்தகங்களையும் படிக்கத் தூண்டுகின்றனர் பெற்றோர். அவர்கள் கலாச்சாரத்திற்கும் வாழ்க்கைத் தரத்திற்கும் அது பொருத்தமாய் இசைந்து விடுகிறது—மீட்டினால் கேட்கும் இசையைப் போல! ஆனால் —

நம் நாட்டின் வாழ்க்கைத் தரம் வேறு! ஓடாய் உழைத்து தந்தை கொண்டு வந்து கொட்டினால் தான் தனயன் கிழிசலற்ற உடை உடுக்க முடிகிறது. சாதித் துவேஷமும்; தற்பெருமையும் தலைவிரித்தாடுகிறது இங்கே. ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. ஐயம் உளதோ இதில்? 'அல்ல' வென்று தான் நீ கூறுவாய்!

தேகப் பயிற்சி அவசியம்; மிகுதி நேரம் கருத்து நிறைந்த புத்தகங்களைப் படி. வெறும் துப்பறியும் நாவல் உனது வாழ்வை வளமாக்கி விடாது! ஆயிரம் துப்பறியும் நாவல்கள் உனக்கு அளிக்கும் அறிவை அறிஞர் ஒருவர்தம் புத்தகம் ஒன்று தரும், என்பது என் முடிவு.

எனவே நீ கேட்டு எழுதிய புத்தகத்துக்குப் பதிலாக வேறு அனுப்புகிறேன். உனது நண்பனுக்கு இதைக் கூறு. ஏனெனில் நாட்டைப் பற்றித் தெய்வப் புலவர் கூறுவதையே நானும் ஈண்டு கூறவேண்டியிருக்கிறது. "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக் கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு"

புரிகிறதா? கட்டாயம் என்று எண்ணுகிறேன். ஓய்வு நேரத்தை உன்னதமாக கழி. புத்தகப் புழுவாக நீ மாற விரும்பவில்லை என்றால் தோட்ட வேலையில் ஈடுபடு; னதயல் பழகு. அவையும் தேவையில்லை என்று நீ கருதுவாயானால் காந்திஜி செய்ததை நீயும் செய். அதாவது தினசரி எப்படியாவது ஒன்று அல்லது இரண்டு மைல்கள் நட. உடலுக்கு உரமளிக்கும். வாழ்க.

அன்புத் தமையன்,
தேன்மலர்.

## அட பாவமே!

டேய்! எங்கேடா வெளிக்கிட்டாய்? என்று குமாரை அதட்டினர் அவன் அப்பா. "இல்லை அப்பா இண்டைக்கொரு பூட் பால் மாச் (Foot ball match) நடக்குது அதைப் பார்க்கப்போறேன் அப்பா" "போடா போய் படிடா! ஆளைப்பார், பெரிய பூட் போல் பிளேயர் மாதிரி வெளிக்கிட்டுட்டார்" என்று குமாரை அதட்டி வீட்டில் இருத்திவிட்டு வெளியே சென்றுவிட்டார் அவன் அப்பா. குமாரா இருப்பவன்? அப்பாவுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டு கோடிப்புறத்தால் ஓடிவிட்டான் முற்றவெளிக்கு.

ஜே. ஜே. என்று ஜனத்திரள் கூடியிருந்தது கால்ப்பந்தாட்டத்தைப் பார்ப்பதற்காக. அத்துடன் "கடலே வடே ஐஸ்கிறீம்" என்ற வியாபாரிகளின் கூக்குரல் ஒரு பக்கம் காதை அடைத்தது. குமார் ஒரு படியாகத் திக்கு முக்காடிக் கொண்டு கூட்டத்திற்குள் நுழைந்து ஒரு படி முன்பு போய் நின்றான் வெகு கம்பீரமாக.

ஆட்டம் சுவஸ்ராசியமாக நடந்துகொண்டிருந்தது. அதோ! ஒரு பக்கத்திலுள்ள விளையாட்டு வீரரொருவர் 'கோல்' ஒன்றைப் போடப் போகிறார். எல்லோரும் 'ஷிட்' என்று கத்தினர். அடுத்த கணம்? தன்பலத்தையெல்லாம் கூட்டிப் பந்தை உதைப்பதுபோல் காலை விசினான் குமார். எதிரிலிருந்த கடலைப் பெட்டிக்கு 'பின்' பார்க்க வேண்டுமா? கடலை யெல்லாம் வாயைப் பிளந்து விளையாட்டை ரசித்துக்கொண்டிருந்த ரசிகர்களின் வாயுள்ளும் விழுந்தன. அதைத் தொடர்ந்து 'பளால்' என ஓர் அறை விழுந்தது குமாரின் கன்னத்தில். குமார் ஆ என்றலறியபடியே திரும்பினான். என்ன அநியாயம்! கோவ்வைக் கண்களுடன் குமாரின் அப்பாவா நிற்க வேண்டும்! ஆனால் குமாரின் மனமோ "வரவேண்டும் வரவேண்டும் அப்பாவே! ஐந்து ரூபா நோட்டை கடலைக்காரனிடம் நீட்டுங்கள் அப்பாவே" என்று வாழ்த்திற்று.

—மு. பொன்னம்பலம்.

## குட்டு வெளிப்பட்டது

பாடசாலையில் சித்திரப் போட்டி நடைபெற்றது. எல்லோரும் போட்டிக்குச் சித்திரங்கள் வரைந்து கொடுத்தார்கள். கோபாலும் மிகவும்சிறப்பாக வரையப்பட்ட ஒரு படத்தைக் கொடுத்தான்.

மறுநாள் சித்திரப் போட்டியின் முடிவுகள் வெளிப்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்

# உடன்படிக்கையை அமுல் நடத்த அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்

## தமிழரசு வாலிப முன்னணி கூட்டத்தில் பேச்சு

"எந்த இனத்துக்கும் தனக்கென ஒரு பிரதேசம்—ஒரு தாயகம் இல்லாவிட்டால் அந்த இனமும் அதன் மொழியும் அழிந்தொழிந்து விடுவது நிச்சயம். இது சரித்திரம் காட்டும் உண்மை. எதிர் காலத்தில் ஈழத்திலே நமக்கென ஒரு அரசு வேண்டும் என்றால் நமது நாடு சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். மொழியுரிமையிலும் நில உரிமைதான் முக்கியமானது. ஆட்சியாளரும் சமஷ்டித் தலைவர்களும் செய்து கொண்ட உடன்படிக்கைமூலம் நமது நாடு பாதுகாக்கப்படுகிறது. உடன்படிக்கையை எதிர்ப்பவர்கள் இதை உணர முடியாதது ஏனோ?

இவ்வாறு கோப்பாய்த் தமிழரசு வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் கோவை மகேசன் கேட்டார். திரு அ. உலகநாதன் தலைமைவகித்தார்.

திரு மகேசன் மேலும் கூறியதாவது:-

'தனிச் சிங்களச் சட்டம் இருந்தபடி இருந்தாலும் அதன்மூலம் தமிழ் பேசும் மக்கள் பாதிக்காதபடி உடன்படிக்கை பாதுகாக்கிறது. உடன்படிக்கை அமுலுக்கு வரும்போது தமிழ் நாட்டில் தமிழே ஆட்சி மொழியாக விளங்கும். வடக்கிலும் கிழக்கிலும் தனிச் சிங்களச் சட்டம் செத்துவிடும். தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரும் ஒன்றுபட்டு ஒரே குரலில் உடன்படிக்கையை அமுல் நடத்தும்படி அரசாங்கத்தைக் கோர வேண்டும்.' கூட்டத்தில் வேறு பலரும் பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) செல்வநாயகம்—பண்டாரநாயகா உடன்படிக்கையை கூடியசீக்கிரம் அமுல் நடத்தக்கூடிய சட்டத்தை இயற்றுமாறு ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்வது.

(2) பருத்தித்துறை—யாழ்ப்பாணம் பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம் காரணமாகப் பொதுமக்கள் கஷ்டப்படுவதால், கோப்பாய்ப் பிரதிநிதியும் போக்குவரத்து அமைச்சரும் இது விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்முன்னணி கேட்டுக்கொள்ளுகிறது.

—

### பெரிய போரதீவு தி. மு. க. வாலிபர் மன்றம்

பெரிய போரதீவு திராவிட முன்னேற்றக் கழக வாலிபர் மன்றத்தின் ஆதரவில் சென்ற 2-9-57ல் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு பூ. செல்லத்துரை தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன:-

(1) பெரிய போரதீவு பத்திரகாளி அம்பன் கோவிலில் எதிர்வரும் புரட்டாதி மாதத்தில் நடக்கவிருக்கும் வருடாந்த உற்சவத்தின்போது பலிகொடுக்கும் வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்று கோவில் நிர்வாகஸ்தர்களை இம்மன்றம் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) பலிகொடுக்கும் வழக்கத்தை நிறுத்தாதபட்சத்தில் வரிகொடா இயக்கம், திருவிழா முடியும்வரை உண்ணாவிரதமிருத்தல் போன்ற நேரடி நடவடிக்கையிலிறங்குவதென மன்றம் தீர்மானிக்கிறது.

### பாரதி, ஜின்னா தின விழா

பன்வில அ. த. க. சி. பாடசாலை மாணவர் மன்ற ஆதரவில் பாரதி, ஜின்னா தின ஞாபகார்த்தக் கூட்டம் மேற்படி பாடசாலைதலைமையாசிரியர் பண்டிதர் த. பொ. கார்த்திகேசு தலைமையில் ஆரம்பமாயிற்று. தலைவர் தலைமையுரையின் பின் மாணவ மாணவிகளின் பாரதியார்பற்றிய பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற செல்வி கா. இராஜேஸ்வரி, செல்வி இ. பாப்பு என்போருக்கு முறையே முதலாம், இரண்டாம் பரிசுகளும், பாடல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு வகுப்புவாரியாய் பரிசுகளும் வழங்கப்பட்டன. ஜின்னா தினம்பற்றிய பேச்சுப் போட்டியில் பங்குபற்றிய மாணவன் செல்வன் ஏ. சி. எம். நிசார் என்பவருக்கு பரிசு வழங்கப்பட்டது.

—

### மாணவர் மறுமலர்ச்சி மன்றம்

வருதாலை அரசினர் மத்திய கல்லூரி மாணவர் மறுமலர்ச்சி மன்றத்தினரால் சென்ற 25-9-57ல் ஆசிரியர் திரு வி. கதிரவேலு தலைமையில் பாரதி விழா கொண்டாடப்பட்டது.

திரு எஸ். நடராஜா பிரதம விருந்தினராக விழாவில் கலந்துகொண்டார்.

செல்வர்கள்: ஏ. சி. கே. சாமி, ரெஜினோல்ட், செல்விகள்: நோறபரீதா, டி. எம். தேவயானி ஆகியோரும் பேசினர். ஆசிரியர் திரு கே. கே. கிருஷ்ணபிள்ளை பாரதி பாடல்கள் பாடினார். மன்ற மாணவர்களால் ஒரு நாடகம் நடிக்கப்பட்டது. மாணவிகளால் பாரதி வணக்கப் பாடல்கள் பாடப்பட்டது. பாரதி பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு ஆசிரியர் திரு ஜி. ஏ. ஞானசிகாமணி பரிசுகள் வழங்கினார்.

—

### திரு வி. க. நினைவுப் பள்ளி

திரு வி. க. நினைவுப் பள்ளியின் ஆதரவில் சென்ற 4-10-57-ல் திரு க. பரமசிவன் தலைமையில் காந்தி பார் பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது.

பள்ளி நிர்வாகி திரு வி. எஸ் இரத்தினம், தலைமையாசிரியர் திரு மா. சே. அருள், மாணவர்களாகிய கே. டி. முத்து, எஸ். எம். அந்தோனி, வி. முனியாண்டி, திருச்செல்வம், ஞானமிர்தம், சந்தனம், செல்விகள்: கிருட்ணாம்மாள், இராசம்மாள் ஆகியோர் காந்தியடிகள் மாணவர்களுக்குக் கூறியிருக்கும் அறிவுரைகளை மிக அழகாக எடுத்துக் கூறினர்கள்.

### அரசினர் பாடசாலையில் கலைமகள் பூசை

'கலைத் தேவி'யான கலைமகளுக்கு, கிரான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சென்ற 30, 1, 2, 3 ஆகிய திகதிகளில் மிக விமரிசையாகப் பூஜை நடைபெற்றது.

விழா நடைபெற்ற நாலு நாட்களும், கலைவாணியின் பெருமை கிராமம் முழுக்கக் கரைபுரண்டோடிய வண்ணமிருந்தது. பெருந் திரளான மக்கள் தினசரி விழாவில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

விழாவின் இறுதி நாளன்று நடைபெற்ற ஊர்வலத்தின் போது, ஊர் மக்கள் வீட்டுக்கு வீடு பூர்ண கும்பம் வைத்துக் கலைத் தேவியை வணங்கியகாட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

—

### பம்பாய் இ. மா. செ. வ. சம்மேளனம்

இராமநாதபுரம் மாவட்டம் செடியூல்ட் வகுப்பார் சம்மேளனம் பம்பாய் கிளையின் அவசரப் பொதுக் கூட்டம் சென்ற 24-9-57-ல் பம்பாய் ''கிஸ்மட்'' நிலையத்தில் திரு. எஸ். கே. மாயக் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் திருவாளர்கள் அ. நாச்சியப்பா பெ. சண்முகம் தி. வெ. சோலைமலை கு. சிதம்பரம், மு. வெ. முத்தையா ஆகியோர் முதுகுளத்தூர் சிவகங்கை பரமக்குடி—அருப்புக் கோட்டை, மதுரை, போன்ற வட்டாரங்களில் ஜாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்குமிடையே நடந்த கலவரத்தைக் குறித்துப் பேசினார்கள்.

பின்னர் கலவரம் பற்றி பூரண விசாரணை நடத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீதி வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்ளும் சில தீர்மானங்களை நிறைவேற்றி இந்திய பிரதமருக்கும் காமராஜருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

### இளைஞர் முன்னேற்ற மன்றம்

கொழும்பு இளைஞர் தமிழ் முன்னேற்ற மன்றத்தின் முதலாவது செயற்குழுக் கூட்டம் சென்ற 22-9-57-ல் கொள்ளுப்பிட்டி அர்ச் அந்தோனியார் பாடசாலை மண்டபத்தில் திரு. ப. அருட்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மன்ற நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:


போஷகர்: எஸ். எம். நாயகம், தலைவர்: ப. அருட்பிரகாசம், உப தலைவர்: நா. குமாரநாயகம், பிரதம செயலாளர்: ஏ. சிவலோகநாதன், உப-பிரதம செயலாளர்: ஞா. வரப்பிரகாசம் பொருளாளர்: சி. சுந்தரம், உப-பொருளாளர்: இ. அன்னலிங்கம், கணக்குப் பரிசோதகர்: செ. விக்கினராசா தமிழ் நூலகச் செயலாளர்: சு. நித்தியானந்தன், பத்திரிகை ஆசிரியர்: ச. மைக்கல்.

### பாரதி இளைஞர் சங்கம்

பாரதி இளைஞர் சங்க ஆதரவில் சென்ற 11-9-57ல் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் நயமணி திரு கல்கி தாசனார் தலைமையில் மகாகவி பாரதி அமர விழாவும் சுவாமி சிவானந்தரின் 71வது ஜெயந்தி திருநாளும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டன.

தலைவர் பேசும்போது ''அடிமைப்பட்டிருந்த மக்களை தட்டி எழுப்பியவர் பாரதி. அஞ்ஞான இருளில் கிடந்த மக்களை மெஞ்ஞான வழியில் செல்ல மார்க்கம் காட்டியவர் சுவாமி சிவானந்தர். எனவே, பெரியோர் திருநாளை ஆண்டுதோறும் கொண்டாட வேண்டியது மிக அவசியம்'' என்று கூறினார்.

திருவாளர்கள்: அ. பட்டையா, செ. பொ. பாலையா கே. ஆறுமுகம் ஆகியோர் பேசிய பின்பு காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கே. என். அப்துல்காதர் ராவுத்தர் & கம்பெனி
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10




'V' பட்டியால் இயங்கும் ஒரு யந்திரம்

மெஷின்பட்டிகள்

நீண்டகால உழைப்புக்கும் மெதுமையான ஓட்டத்திற்கும் வேண்டிய பலதிறப் பட்டிகள் எங்களிடம் இருக்கின்றன.

★ தோல் பட்டி
★ உரோமப் பட்டி
★ றப்பர் பட்டி
★ நூல் பட்டி
★ 'V' பட்டி

உங்களுக்கு வேண்டிய அளவு (சைஸ்)களுக்கு ஆடர் அனுப்புங்கள்

விற்பனையாளர்:—

சாமுவேல் சன்ஸ் அன் கம்பெனி லிமிட்டெட்,


''ஜுபிலி பில்டிங்'', தபாற் பெட்டி: 46,
371, [illegible] சோனகத் தெரு, கொழும்பு—12.
கிளை ஸ்தாபனம்: ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு)

**மொடர்ன்** (பதுளை) **கிருஷ்ணு** (திருகோணமலை) ஆகிய திரைகளில்



ஏ. நாகேஸ்வரராவ்,
கே. சாவித்திரி, என். ஜமுனு,
ரேலங்கி,
வெங்கட்ராமய்யா,
சூரியகாந்தம், கே. ஜக்கய்யா



ஆகியோர் நடித்துள்ள

அன்னபூர்ணுவின்

# திருட்டுராமன்

டைரக்ஷன்:
**கே. வி. ரெட்டி.**

பின்னணி இசை:
பி. சுசீலா, ஜிக்கி, கண்டசாலா
ஆகியோர்.



நடனங்கள்:
குசலகுமாரி,
மாலதி,
வனமாலா
ஆகியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா தெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 ஒக்டோபர் மாதம் 20-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.